ஊவா மாகாண சபை 2023 ஆண்டு

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஊவா மாகாண சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருன்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் தொடர்பான தகவல்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களுடன் தொடர்பான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 23(1) பிரிவில் உள்ளடங்கும் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாண சபைகள் சட்டத்தின் 23(2) பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகள் பிரகாரம் பொழிப்பு அறிக்கை 2024 மே 28 ஆம் திகதி வெளியிடப்பட்டதுடன் தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(2) உப பிரிவின் ஏற்பாடுகள் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 மே 31 ஆம் திகதி வெளியிடப்பட்டது அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரை மற்றும தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10(1) உப பிரிவின் பிரகாரம் இவ்வறிக்கை பாராளுமன்றத்திற்கும், அறிக்கையின் பிரதி 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 23(2) பிரிவின் பிரகாரம் மாகாண சபையின் முன்னிலையில் சமர்ப்பிக்க ஆளுனரிற்கும் சம்ர்ப்பிக்கப்படும்.

❖ எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்களினுள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஊவா மாகாண சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு கொள்கைகளிற்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்க 8 பிரகாரம் எதர்பாரா பொறுப்பு வெளிப்படுத்தப்பட வேண்டிய போதும் ஊவா மாகாண சபைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த விசாரிக்கப்படும் 03 வழக்குகள் தொடர்பாக ரூபா 320,274,129 ஆன எதிர்பாரா பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | பொறுக்புக்களின் அளவிற்குரிய வழக்குகள் தற்போது விசாரிக்கப்பட்டு வருவதனால் பொறுப்பின் அளவு திட்டவட்டமாக தீர்மானிக்கப்படவில்லை ஆகையால் கணக்கில் வெளிப்படுத்தலின் கீழ் காட்டப்படவில்லை.<br><br>கணக்காய்வு பந்தியில் குறிப்பிட்டுள்ள சட்டப் பிரிவினால் இதற்கு முன்னர் அறிக்கையிட்ட வீதி அபிவிருத்தி கருத்திட்டத்திற்கு உரிய ரூபா 303,274,129 ஆன தொகை மாகாண சபை நிதியத்திலிருந்து செலுத்த வேண்டிய தொகை அல்லாததுடன் அது மாகாண சபை அமைச்சின் கருத்திட்ட் அலுவலகத்தின் கீழ் | மாகாண சபைக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்க 8 பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | | மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டத்திற்குரிய தொகையாகும். அந்த அமைச்சின் ஏற்பாட்டின் கீழ் எப்படியேனும் செலுத்த வேண்டியதால் இத் தொகை மாகாண சபை நிதியத்தின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்க முடியாது. மாகாண சபை நிதியத்தின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுவது மாகாண சபை நிதியத்தினால் செலுத்த வேண்டிய பொறுப்புக்கள் மாத்திரமெனக் குறிப்பிடுகிறேன். | |
| (ஆ) | 2023 ஆண்டின் 04 வர்த்தக முற்பணக் கணக்குகளிற்கு உரியதாக ஈட்டப்பட்ட கூட்டுத் தொகை ரூபா 39,656,320 ஆன இலாபம் மாகாண சபை நிதி விதி 510.2 (ஆ) பிரகாரம் மாகாண சபை நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆண்டிற்குரிய இந்த இலாபங்கள் ஆண்டின் கணக்குகளை தயாரித்து இலாபங்களை இனங்கண்ட பின்னர் 2024 ஆண்டில் அனுப்புதலாக பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடுகிறேன். | மாகாண சபை நிதி விதி 510.2 (ஆ) பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 02 வர்த்தக முற்பணக் கணக்குகளிற்கு உரியதாக மீளாய்வாண்டின் இலாபத்திற்கு பதிலாக 2022 ஆண்டிற்குரிய ரூபா 7,812,300 ஆன இலாபம் மீளாய்வாண்டின் இலாபமாக குறிப்புகளினூடாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | மாகாண நிதியத்தின் இறுதி நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படும் போது கைத்தொழில் திணைக்களத்திற்கு உரிய வர்த்தக முற்பணக் கணக்கை தயாரித்து சமர்ப்பித்திருக்காத காரணத்தால் குறித்த ஆண்டின் இலாப நட்டம் செம்மையாக்கப்படவில்லை. எனினும் அதன் போது மாகாண சபை நிதியத்திற்கு அறிக்கையிடப்பட்டுள்ள இறுதி ஆண்டின் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு வெளிப்படுத்தல் காட்டப்பட்டுள்ளது. | ஆண்டிற்காக ஈட்டப்பட்ட இலாபம் அல்லது நட்டம் நிதிக்கூற்றிற்குள் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | 04 வர்த்தக முற்பணக் கணக்குகளிற்கு உரியதாக 2023 ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 22,562,776 ஆன நிலையான சொத்து பெறுமானத் தேய்விற்கு சமனான தொகை மாகாண சபை நிதி விதி 509.1 பிரகாரம் மாகாண திறைசேரி பெறுமானத் தேய்வு ஒதுக்கத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆண்டிற்குரிய இந்த பெறுமானத் தேய்வு ஒதுக்க பெறுமதி ஆண்டின் கணக்குகள் தயாரித்ததன் பின்னர் 2024 ஆண்டில் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடுகிறேன். இதற்கு முன்னைய ஆண்டுகளிலும் குறித்த ஆண்டின் பெறுமானத் தேய்வு ஒதுக்கம் அதற்கு பிந்திய ஆண்டு அனுப்பப்பட்டுள்ளதாக குறிப்பிடுகிறேன். | மாகாண சபை நிதி விதி 509.1 பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | ஊவா மாகாண சபையின் 07 நிறுவனங்களிற்குரிய ரூபா 208,371 பெறுமதியான பொறுப்புக்கள் மாகாண சபை | 2023 ஆண்டின் பொறுப்பாக இனங்காணாது மற்றும் பொறுப்பாக கணக்கிட அறிக்கை இடப்படாத இந்த பட்டியல் பெறுமதி 2024 | பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களினுள் சரியாக காண்பிக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | நிதியத்தின் 2023 திசெம்பர் 31 திகதியுடன் முடிவடைந்த ஆணடிற்காக நிதிக்கூற்றினுள் உள்ளடக்கப்படாமை மற்றும் குறைவாக காட்டியுள்ளமை காரணமாக அத்திகதியில் நிதி நிலைமை கூற்றில் நடைமுறை பொறுப்புக்களின் பெறுமதி அந்த மீதியினால் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | ஆண்டின் நிதிக்கூற்றுக்களினுள் 2023 ஆண்டிற்குரியதாக மிகை மற்றும் பற்றாக்குறையினுள் செம்மையாக்க குறிப்பு இடப்பட்டுள்ளது. | வேண்டும். |
| (ஊ) | 2023 திசெம்பர் 31 திகதி ஊவா மாகாண கூட்டுறவு சேவைகள் ஆணைக்குழுவின் ஒதுக்கீட்டு கணக்கில் நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மீதி இணைந்த நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்டு இருந்த அந்த மீதியுடன் ரூபா 425,700 இனால் இணங்கவில்லை. | குறித்த நிறுவனத்தினால் நிலையான சொத்து தொடர்பாக இடம்பெற்றுள்ள வித்தியாசம்(பராதீனம்/பரிமாற்றம் ) தொடர்பான தகவல்கள் அறிக்கையிடப்பட்ட பின்னர் சில வித்தியாசம் ஏற்பட்டுள்ளதாக வெளிபடுகின்றது. இதனூடாக சில தாக்கங்கள் இடம்பெற்றிறுப்பின் அதனை எதர்வரும் ஆண்டில் நிதிக்கூற்றுக்களினுள் சீராக்க நடவடிக்கை எடுக்கப்படும். | இணைந்த நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கும் தகவல்கள் நிறுவனங்களில் உள்ளடங்கும் தகவல்களுடன் இணங்க வேண்டும். |

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந்த நிதிக்கூற்றுக்கள் மீதான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாக முன்வைத்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றதாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மாகாண சபையின் நிதி அறிக்கையிடும் செயற்பாடுகள் தொடர்பாக பரீட்சிக்கும் பொறுப்பு மாகாண திறைசேரி உள்ளிட்ட அந்த அந்த நிறுவனங்களின் முகாமைத்துவத்தினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் ஊவா மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரியவாறு புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்ல வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது காணக்காய்வின் ஊடாக இனங்காணப்பட்ட முக்கிய கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், முக்கிய உள்ளக கட்டுப்பாடடு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக முகாமைத்துவம் அறிவுறுத்தப்பட்டது.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கருத்துரை வழங்கல்

### 1.5.1 தலைப்பு 700 – ஆளுனர் அலுவலகம்

### (அ) இனக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் தொடர்பு | இணங்காமை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | சனாதிபதி சுற்றறிக்கை | | | |
| (i) | 2018 ஒக்டோபர் 12 திகதிய இலக்கம் பீஎஸ்/சீஎஸ்ஏ/11-18 கொண்ட அரச செலவின முகாமைத்துவ சுற்றறிக்கை | மாகாண சபைகளில் ஆளுனர்களிற்கு மற்றும் அவர்களின் தனிப்பட்ட ஆளணியினரிற்கு கிடைக்க வேண்டிய வசதிகள் பற்றி சுற்றறிக்கையில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ள போதும் அதற்கு இணங்காதவாறு தனிப்பட்ட ரீதியில் செலவிட வேண்டிய ரூபா 808,334 ஆன செலவினம் மாகாண சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. | ஊவா மாகாண ஆளுனர் உத்தியோகபூர்வ இல்ல பயன்பாட்டிற்காக எரிவாயு வழங்கப்பட்ட போதும் இவை மதிப்பிற்குரிய ஆளுனரின் தனிப்பட்ட பாவனைக்காக அவரிற்கு வழங்கப்படவில்லை. | சனாதிபதி செயலாளரின் சுற்றறிக்கை பிரகாரம் செயற்பட்டு செலவினை முகாமைத்துவம் செய்ய வேண்டும். |
| (ii) | சனாதிபதி செயலாளரின் இலக்கம் PS/CSA/11-18 மற்றும் 2018 ஒக்டோபர் 12 திகதிய அரச செலவின முகாமைத்துவ சுற்றறிக்கையின் 4.3 பிரிவு மற்றும் 2014 சனவரி 01 திகதிய மாகாண சபை செயலாளர்களை விழித்த இலக்கம் 01/2014 கொண்ட தேசிய வரவு செலவு சுற்றறிக்கையின் 2.1.3(ii) பந்தி | எரிபொருள் பட்டியல் மீது மேற்கொள்ளப்படும் மீள் நிரப்பல் ஒன்றல்லாது மாதாந்த படியொன்றாக செலுத்த வேண்டுமெனவும், அங்கு குறித்த மாதத்தின் முதலாம் திகதி உள்நாட்டு சந்தையில் நிலவும் எரிபொருள் விலையின் பிரகாரம் படிகள் தீர்மானம் செய்யப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ள போதும், அதற்கு இணங்காதவாறு ஊவா மாகாண ஆளுனர் மற்றும் அவறின் ஒருங்கிணைப்பு செயலாளர், அந்தரங்க செயலாளர், ஊடக செயலாளர் மற்றும் | ஊவா மாகாண மதிப்பிற்குரிய ஆளுனர் மற்றும் அந்த ஆளணியினரிற்காக ஒதுக்கப்பட்டுள்ள UP CAG 7655, UP CAR 0550, UP CAR 1602, UP CAR 0895 மற்றும் CAV 2060 கொண்ட ஐரோபா மற்றும் ஜப்பானில் உற்பத்தி செய்த நவீன வாகனங்களிற்காக இலங்கையில் பயன்படுத்தும் எரிபொருளில் விஷேட டீசலை பயன்படுத்துமாறு உள்நாட்டு முகவர் நிறுவனத்தினால் உத்தியோகபூர்வமாக | எரிபொருள் பாவனையை முகாமைத்துவம் செய்து கொள்வது வாகனம் பயன்படுத்தும் அலுவலர்களின் பொறுப்பாவதுடன் சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பொது மக்கள் ஒருங்கிணைப்பு அலுவலரிற்கு 2022 ஆகஸ்ட் முதல் 2023 ஜூன் வரை விஷேட டீசலிற்காக எரிபொருள் கட்டணம் ரூபா 2,439,475 தொகை கூடுதலாக செலுத்தப்பட்டு இருந்தது. | அறிவித்துள்ள காரணத்தால் பராமரிப்பு மற்றும் சேவை செலவினத்தை குறைத்துக் கொள்ளும் தேவைப்பாட்டிற்காக விஷேட டீசல் விநியோகிக்கப்பட்டு உள்ளது. தங்களால் சுட்டிக் காட்டிய சுற்றறிக்கை பிரகாரம் ஏனைய அனைத்து வாகனங்களிற்கும் 2023 ஏப்ரல் முதல் சாதாரண டீசல் பயன்படுத்திய போதும், அந்த வாகனங்களின் எரிபொருள் தெறி தொகுதியினுள் (Injector system) வழுக்கள் ஏற்பட்டு வாயு பரீசோதனை கூட தோல்வியடையும் நிலைமை அவதானிக்கப்பட்டதாக குறிப்பிடுவதுடன், அதன் காரணமாக பராமரிப்பு செலவுகள் அதிகரிக்கும் நிலைமை அவதானிக்கப்பட்டது. | |

**1.5.2 தலைப்பு 701 – சபை செயலாளர் அலுவலகம்**

**(அ) இனக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் தொடர்பு | இணங்காமை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| சனாதிபதி சுற்றறிக்கை | | | |
| 2022 ஒக்டோபர் 28 திகதிய இலக்கம் பீஎஸ்/சீஎஸ்ஏ/11-18(II) கொண்ட சனாதிபதி செயலாளரின் அரச செலவின முகாமைத்துவம் மாகாண சபை எனும் தலைப்பில் | தலைவரிற்கு உத்தியோகபூர்வ வாகனம் 01 மற்றும் அந்த உத்தியோகபூர்வ வாகனத்திற்கு பெற்றல்/டீசல் 400 லீற்றர் விலைக்கு சமமான மாதாந்த எரிபொருள் படிகள் | 2024 ஆண்டு முதல் சாதாரண பெற்றல் மற்றும் டீசல் விலைகளின் பிரகாரம் எரிபொருள் படிகள் வழங்கப்பட்ட போதும் வாகனத்தில் தொழில்நுட்ப தவறுகள் ஏற்படக் | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| வெளியிடப்பட்ட சுற்றறிக்கை | உரித்தாவதுடன் அந்த படியை குறித்த மாதத்தின் முதலாம் திகதி உள்நாட்டு சந்தையில் நிலவும் எரிபொருள் விலையின் பிரகாரம் படிகள் தீரமானம் செய்யப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் அதற்கு இணங்காதவாறு விஷேட டீசல் ஒரு லீற்றரின் விலையை அடிப்படையாகக் கொண்டு 2023 ஆணடிற்காக ரூபா 344,800 கூடுதலாக எரிபொருள் படிகள் செலுத்தப்பட்டு இருந்தது. | கூடுமாகையால் தற்போது அந்த வாகனத்திற்காக விஷேட பெற்றல் மாத்திரம் பயன்படுத்துவதாக மதிப்பிற்குரிய தலைவரினால் அறிவிக்கப்பட்டுள்ளது. |

**(ஆ) சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 6 ஆவது ஊவா மாகாண சபையின் உத்தியோகபூர்வ காலம் முடிவடைந்த பின்னர் பெயரளவிலான பதவி வகிக்கும் தலைவரின் தனிப்பட்ட 05 ஆளணி அலுவலர்களிற்கு, அந்த அலுவலர்ளின் வரவு வெளிச் செல்லல் பதிவேடு, கையொப்பம் இடாமை மற்றும் மேற்கொண்ட வேலைகளை பரீட்சிக்க முடியுமானவாறு உள்ளக கட்டுப்பாட்டு முறைமை ஒன்றை நிறுவாது தலைவரினால் உறுதி செய்த வரவு மற்றும் வெளிச்செல்லல் அறிக்கையை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு 2023 ஆண்டின் 365 நாட்களில் 362 நாட்களிற்காக சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 1,943,414 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | 2024 ஏப்ரல் மாதம் முதல் சம்பளம் செலுத்துவதற்காக மாதாந்த வரவு பதிவேட்டின் பிரதியொன்று உறுதிப்படுத்தி சமர்ப்பிக்கப்படுகின்றது. | கொடுப்பனவு செய்யும் போது ஏற்றுக் கொள்ள முடியுமான சான்றுகளின் மீது கொடுப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

1.5.3 **தலைப்பு 704 – ஊவா மாகாண பிரதான செயலாளர் மற்றும் நிதி முறைமை திட்டமிடல், சட்டம் மற்றும் சமாதானம், கல்வி, உள்ளூராட்சி, மின்சக்தி மற்றும் வலுச் சக்தி, நிர்மாணம் மற்றும் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் காணி தொடர்பான அமைச்சு**

**(அ) இனங்காணப்பட்ட நட்டங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2015 சனவரி 27 திகதி பிரதான அமைச்சின் தனிப்பட்ட ஆளணியின் சாரதி மதுபோதையில் வாகனம் செலுத்தி அமைச்சிற்கு சொந்தமான டொயோடா வகையிலான கெப் வண்டியொன்றை 2015 மே 15 திகதி விபத்திற்கு உள்ளாக்கி ரூபா 1,486,547 நட்ட சேதத்தை ஏற்படுத்தியிருந்தார். ஊவா மாகாண பிரதான அமைச்சின் தனிப்பட்ட ஆளணியினரின் ஊடக செயலாளரின் கடமைக்காக ஒப்படைத்திருந்த இந்த கெப் வண்டியை விபத்திற்கு உள்ளாக்கிய குற்றவாளியாக இருந்த சாரதிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன் இடம்பெற்ற மேற்படி நட்டத்தை 2023 ஆகஸ்ட் 10 திகதி வரையும் அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நட்டம் ரூபா 1,486,547 தொகையை அறவிட பதுள்ளை மாவட்ட நீதிமன்றத்தில் எம்/9872 இலக்கத்தின் கீழ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் வழக்கு தீர்ப்பின் பிரகாரம் முன் நடவடிக்கை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது. | வழக்கு தீர்ப்பின் பிரகாரம நடவடிக்கை எடுக்க வேண்டும். |

1.5.4 **தலைப்பு 705 – விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், சுற்றுலா, போக்குவரத்து, கலாச்சார மற்றும் நெசவுக் கைத்தொழில் மற்றும் குடிசைக் கைத்தொழில் அமைச்சு**

**(அ) சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஊவா மாகாண விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், சுற்றுலா, போக்குவரத்து, கலாச்சார மற்றும் நெசவுக் கைத்தொழில் மற்றும் குடிசைக் கைத்தொழில் அமைச்சு ஊவா மாகாணத்தில் சுற்றுலா கவர்ச்சியை மேம்படுத்துவதற்காக பன்டாரவெல புகையிரத நிலையத்திற்கு அருகில் 03 கட்டங்களின் கீழ் காட்சி மேடையொன்றை மற்றும் வாடி வீடொன்றையும் நிர்மாணிக்க திட்டமிட்டிருந்தது. அதன் முதலாம் கட்டத்தின் கீழ் ரூபா 2,232,537 செலவில் காட்சி மேடையை மாத்திரம் நிர்மாணித்திருந்தது. 2023 | வரிசை சுற்றுலா அமைச்சின் ஏற்பாட்டு தொகையின் கீழ் பண்டாரவெல பிரதேச செயலகத்தின் ஊடாக கருத்திட்டத்தை மேற்கொள்ளும் நோக்கில் மாகாண சபை சுற்றுலா அமைச்சின் ஒருங்கிணைப்பின் கீழ் 2022 ஆண்டில் இந்த கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.<br><br>அதன் பிரகாரம் ஆரம்ப கட்டத்திற்காக கிடைத்த தொகையிலிருந்து 2022 ஆண்டில் கருத்திட்டத்தின் ஒரு | ஏதிர்பார்த்த நோக்கத்ததை அடைந்து கொள்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| நவம்பர் 20 திகதி அளவிலும் காட்சி மேடைக்கு உட்பிரவேசிக்கும் படிக் கட்டை அரைவாசி பூர்த்தி செய்து பயன்படுத்த முடியாத நிலையில் காணப்பட்ட போதும் மதிப்பீட்டின் பிரகாரம் படிக் கட்டுகளிற்கு பூரண பொறுமதியான ரூபா 552,543 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் பின்னர் கருத்திட்ட முன்நடவடிக்கைகள் நிருத்தப்பட்டிருந்ததால் கருத்திட்ட வளவில் புற்கள் முளைத்திருந்ததுடன் செலவிடப்பட்ட ரூபா 2,232,537 தொகை சிக்கனமற்ற செலவாக காணப்பட்டது. | பகுதியை பூர்த்தி செய்துள்ளதுடன் எஞ்சிய வேலைகளை பூர்த்தி செய்வதற்காக வரிசை சுற்றுலா அமைச்சின் மூலம் இவ்வாண்டினுள் முற்பணம் வழங்கப்படவுள்ளது. | |

**1.5.5 தலைப்பு 706 – விவசாய, நீர்பாசன, கால்நடை உற்பத்தி, நன்நீர் மீன்பிடி விவகார அமைச்சு**

**(அ) முகாமைத்துவ செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று விதை உருளை கிழங்கு கணக்கின் நிலுவை கடன் மீதி ரூபா 8,832,473 ஆனதுடன் அந்த மீதி 10 ஆண்டுகளிற்கு அதிக காலமாக மாகாண சபை நிதிக்கூற்றுக்களில் சொத்தாக காட்டப்பட்டு இருந்தது. கடன் தவணைகள் மாதாந்தம் படிப்படியாக அறவிடப்படவில்லை என கடந்த ஆண்டுகளின் மற்றும் மீளாய்வாண்டின் அறவீடுகளின் முன்னேற்றத்தை பரீட்சிக்கும் போது அவதானிக்கப்பட்டது. | 2024 சனவரி 01 முதல் 2024 மே 10 வரை கடன் அறவிடும் தற்போதைய முன்னேற்றம் ரூபா 390,526 ஆகும். அதன் பிரகாரம் தொடர்ந்தும் அறவிட வேண்டியுள்ள நிலுவை கடன் மீதி ரூபா 8,441,768 ஆகும். | கடன் மீதியை விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.5.6 தலைப்பு 707 – சுகாதார, உள்நாட்டு மருத்து நன்நடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு, மகளிர் விவகாரம் மற்றும் சமூக நலன்புரி அமைச்சு**

**(அ) முகாமைத்துவ செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கனிஷ்ட சுகாதார சேவைத் தொகுதியை வலுவூட்டும் கருத்திட்டத்தின் ஆரம்ப நோக்மொன்றாக (Disbursement Linked | கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்படும் தேவதுர மற்றும் கொடிகமுவ கனிஷ்ட வைத்திய பராமரிப்பு அலகுகளில் | கணனி மென்பொருளை தயாரித்து வைத்திசாலையை இணையத்துடன் தொடர்பு படுத்தி கனிஷ்ட சேவை |

| | | |
|---|---|---|
| Indicator - 3) மூலம் சுட்டிக் காட்டியுள்ளவாறு குறித்த வைத்தியசாலை அதிகார பிரதேசத்தில் 35 வயதிலும் கூடிய வருடாந்த இலக்கு வைக்கப்பட்ட நபர்களில் குறைந்தபட்சம் 25 சதவீதத்திற்கு நோயாளர்களை பதிவு செய்து ஆபத்தான நோய் நிலைமைகளை தொடர்ந்து தீர்ப்புச் செய்ய வேண்டிய போதும், 2022 ஆண்டில் மொனராகல மற்றும் பதுள்ளை மாவட்டங்களில் முறையே 09 வைத்தியசாலைகள் மற்றும் 12 வைத்தியசாலைகளில் மேற்குறித்த நோக்கத்தை அடைந்து கொள்ள எதிர்பார்த்த இலக்கை அடைந்து கொண்டிருக்கவில்லை. | நோயாளர் தீர்ப்புச் செய்த எண்ணிக்கை மற்றும் நோக்கத்தை அடைந்து கொள்ளும் சதவீதம் பூச்சியமாக குறிப்பிடப்பட்டிருந்த போதும் இந்த வைத்தியசாலைகளில் 2022 ஆண்டில் நோயாளர் தீர்ப்புச் செய்தல் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் குறித்த நோக்கை அடைந்து கொண்டுள்ளதாக குறிப்பிடுகிறேன். குறித்த வைத்தியசாலையினுள் இணைய வசதிகள் இல்லாமை, வைத்திசாலை Verifiable வைத்திசாலையாக ஆக்குதல் தாமதமானமை, 2021 மற்றும் 2022 ஆண்டுகளில் நாட்டில் நிலவிய சீரற்ற சூழ்நிலை போன்ற விடயங்கள் காரணமாக குறித்த இலக்கை அடைந்து கொள்ள முடியாதிருந்தது. | தொகுதியை வலுவூட்டும் கருத்திட்டத்தில் குறிப்பிடப்படும் நோக்கத்தை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**(ஆ) விளைவற்ற மற்றும் குறை பயன்பாட்டு சொத்துக்கள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| கனிஷ்ட சுகாதார சேவைத் தொகுதியை வலுவூட்டும் கருத்திட்டத்தின் கீழ் 2020 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 1,190,000 பெறுமதியான Treadmill sprit fitness உடற்பயிற்சி உபகரணம் 2023 ஜூலை 04 திகதி வரையும் பதுள்ளை பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகத்தில் களஞ்சியங்களில் செயலற்று காணப்பட்டது. | புதிய கட்டிடத்தின் நிர்மாண நடவடிக்கைகள் தாமதித்தன் மீது இந்த உபகரணங்களை நிறுவுதல் தாமதமானது. தற்போது கட்டிடத்தின் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் குறித்த உடற்பயிற்சி உபகரணங்களை பொருத்த தற்போது நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | உடற்பயிற்சி உபகரணங்களை பொருத்த நடவடிக்கை எடுத்து பயன்படுத்த வேண்டும். |

**1.5.7 தலைப்பு 708 – வீதி அபிவிருத்தி, வீடமைப்பு, நீர் வழங்கல், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கூட்டுறவு நடவடிக்கைகள் தொடர்பான அமைச்சு**

**(அ) முகாமைத்துவ செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஊவா மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சில் 2023 ஒக்டோபர் 05 முதல் பணியை விட்டுச் சென்ற ஓர் அலுவலரிடமிருந்து அறவிட வேண்டிய கூட்டுத் தொகை ரூபா 246,100 அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தாபன விதிக் கோவை XXIV ஆம் அத்தியாயத்தின் 4.5 பிரிவின் கீழ் நிலுவை கடன் தொகையை பிணையாளரிடம் இருந்து அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | அறவிட வேண்டிய கடன் தொகையை விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**(ஆ) எதிர்பார்த்த நலன்களை (Out Come) அடைந்து கொள்ளாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஊவா மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சினால் செயற்படுத்தியிருந்த மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 4,134,642 ஆன கமேவெல நீர் உத்தேச திட்ட மறுசீரமைப்பு கருத்திட்டத்திற்காக 2021 மே 11 திகதி ரூபா 03 மில்லியன் ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் கருத்திட்டத்தை 2021 ஒக்டோபர் 31 திகதி பூர்த்தி செய்ய வேண்டி இருந்த போதும் 2024 சனவரி 23 திகதியளவிலும் வடிகால் வெட்டப்பட்டு குழாய்களை புதைக்கும் வேலைகள் மாத்திரம் இடம்பெற்றிருந்தது. | தற்போது கருத்திட்டத்தின் அனைத்து வேலைகளும் பூர்த்தி அடைந்துள்ள போதும் நீர் உந்திக்காக மும்முக மின்சாரம் பெற்றுக் கொள்ளவுள்ளதுடன் இதற்காக இவ்வாண்டு திட்டவட்டமான அபிவிருத்தி மானியம் மூலம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மின்சார சபையின் மதிப்பீட்டை பெற்றுக் கொண்ட பின்னர் விரைவில் மின்சாரத்தை பெற்றுக் கொண்டு தடையேதுமின்றி நலன் பெறுனர்களிற்கு நலன்களை பெற்றுக் கொள்ள முடியும். | விரைவில் தூய குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.5.8 தலைப்பு 709 – பிரதி பிரதான செயலாளர் (ஆளணி மற்றும் பயிற்சி) அலுவலகம்**

**ஆளணியினர் நிர்வாகம்**

**(அ) மாகாண சபை அமைச்சு / திணைக்களம் மற்றும் அலுவலகம் (பாடசாலை மற்று சுகாதார ஆளணியினர் தவிர)**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் இரண்டாம் மட்டத்தில் 215 அலுவலர்கள் மற்றும் ஏனைய (அமைய/தற்காலிக/ ஒப்பந்த | பதில் வழங்கப்படவில்லை. | ஆளணியினரை சமநிலையில் பேணிக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| அடிப்படை) 256 ஊழியர்கள் மிகை சேவையில் ஈடுபடுத்தப்பட்டு இருந்தனர் உயர், மூன்றாம் மற்றும் ஆரம்ப மட்டங்களில் வெற்றிட எண்ணிக்கை 686 ஆகும். | | |

**(ஆ) பாடசாலை ஆளணியினர்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் 1284 ஆசிரியர் உதவி ஆளணியினர் மற்றும் ஏனைய 17 (அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) ஊழியர்கள் மிகை சேவையில் ஈடுபடுத்தப்பட்டு இருந்தனர். அதிபர் பதவியில் 562 மற்றும் ஆசிரியர் சேவை பதவியில் 2891 உம் வெற்றிடமாக காணப்பட்டன. | 2023 ஆண்டில் அதிபர் சேவைக்கு ஆட்சேர்த்த அதிபர்கள் சேவையில் வெற்றிடமாக காணப்பட்ட 331 பதவிகளிற்கு நிரப்பப்பட்டுள்ளனர். அவ்வாறே ஆசிரியர் சேவையில் காணப்படும் வெற்றிடங்களிற்காக தற்போது ஆட்சேர்ப்பு செய்யும் அலுவலர்களினால் நிரப்ப நடவடிக்கை எடுக்கிறேன். | ஆசியர்கள் மற்றும் அதிபர்களின் சமநிலையை பேணிக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**(இ) சுகாதார ஆளணியினர்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சுகாதார ஆளணியின் சிரேஷ்ட, மூன்றாம், இரண்டாம் மற்றும் ஆரம்ப மட்டங்களில் வெற்றிட எண்ணிக்கை 624 ஆனதுடன் அந்த வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பற்றாக்குறையான பதவிகளிற்கு அலுவலர்கள் குறித்த பயிற்சி பாடசாலைகளில் பயிற்சி நடவடிக்கைகளை பூர்த்தி செய்த பின்னர் இந்த பதவிகளிற்கு வரிசை அமைச்சினால் ஆட்சேர்த்து ஊவா மாகாண சபைக்கு ஆட்சேர்த்த பின்னர் வெற்றிடங்களுன் கூடிய நிறுவனங்களிற்கு நிலைப்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது.<br>தற்போது வெற்றிடமாகவுள்ள பராமரிப்பாளர், சிற்றூழிய கட்டுப்பாட்டாளர், தொலைபேசி இயக்குனர் மற்றும் சுகாதார இரசாயனகூட உதவியாளர் ஆகிய பதவிகளிற்காக மாகாண சுகாதார அமைச்சினால் தனிப்பட்ட கோவைகளை பரீட்சித்து, நேர்முகப் பரீட்சை நடாத்தி அவற்றில் தகைமை பூர்த்தி செய்யும் ஊழியர்களை ஆட்சேர்க்க நடவடிக்கை | ஆளணியினர் சமநிலையை பேணிக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | எடுக்கப்பட்டுள்ளதுடன், அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட ஊழியர்களிற்கு பதவிகளிற்கு உரித்தான பயிற்சி வழங்கும் நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | |

**1.5.9 தலைப்பு 710 – சுகாதார சேவைகள் திணைக்களம்**

**(அ) செயற்பாட்டு செயற்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | தியதலாவ, மஹியங்கன மற்றும் வெலிமட வைத்தியசாலைகளின் மருந்து களஞ்சியங்களில் 2023 ஒக்டோபர் 11 திகதி ரூபா 6,737,293 பெறுமதி உடைய காலாவதியான மருந்துகள், ரூபா 1,168,303 பெறுமதியான தரமற்ற மருந்துகள் மற்றும் ரூபா 4,141,049 பெறுமதியான மருந்து இருப்புக்களை பயன்படுத்துவது தொடர்பாக திட்டவட்டமான தீர்மானத்தை வழங்காது தற்காலிகமாக பயன்பாட்டை தடைசெய்துள்ள மருந்துகள் களஞ்சியத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தன. | 2019,2020,2021 மற்றும் 2022 ஆரம்ப பகுதிகளில் காணப்பட்ட கொவிட் தொற்றின் முன்னால் கொவிட் நோயிற்கு அநேக நபர்கள் சிகிச்சை பெற்றதுடன் சாதாரண வெளி நோயாளர் பிரிவு மற்றும் ஏனைய நோய்களிற்கு செலவாகும் மருந்துகளின் பயன்பாடு குறைவடைந்தன. முழுத் தீவிலும் இந் நிலைமை தாக்கம் செலுத்துவதுடன் அந்த மருந்துகளை பயன்படுத்தாது காலாவதியாகியுள்ளன.<br><br>அவ்வாறே சில மருந்துகள் உயிர் காப்பு சேவைக்கு முக்கிய தேவையாக உள்ளதுடன் அவற்றை காலாவதியாகும் திகதி வரை வைத்தியசாலையினுள் வைத்திருக்க வேண்டியுள்ளது.<br><br>அவ்வாறே,<br>• Atrophin sulphate<br>• Aminophilin<br><br>போன்ற மருந்துகளை ஏனைய வைத்தியசாலைகளிற்கு அனுப்பி அதற்கு பதிலாக புதிய இருப்புகளை அழைப்பித்துக் கொள்வதுடன், இந்த மருந்துகள் அநேகமானவைகள் உயிர் காப்பு மருந்துகளாகும். தரம் அற்றவைகளாக இனங்கண்டு அறிக்கையிடப்பட்டுள்ள மருந்துகள் தொடர்பாக உரியவாறு நடவடிக்கை எடுத்து | காலாவதியான மற்றும் தரமற்ற மருந்துகளை ஒழுங்கு முறையாக வெளியேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் மருந்துகள் காலாவதியாக முன்னர் பயன்படுத்த செயன்முறை தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஒதுக்கி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் தேவையான அறிவுரை வழங்கப்பட்ட பின்னர் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறு அலுவலர்களிற்கு பதுள்ளை பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளரினால் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | |
| (ii) | வெல்லவாய ஆதார வைத்தியசாலையின் மருந்து களஞ்சியத்தில் 2023 நவம்பர் 24 திகதியன்று காலாவதியான மருந்து இருப்புகள் பெறுமதி ரூபா 2,007,281 ஆனதுடன் அது தொடர்பாக பின்னூட்டல் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த மருந்துகளில் கூடுதலான அளவு கொரோனா தொற்று காணப்பட்ட கால எல்லையில் காலாவதியான மருந்துகளாகும். அதன் போது நாட்டினுள் நிலவிய கொரோனா தொற்று காரணமாக வைத்தியசாலைக்கு வருகைதந்த நோயாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்ததால் நோயாளர் பராமரிப்பிற்காக கட்டளை இடப்பட்ட மருந்துகளின் பாவனை குறைவடைந்தது. வைத்திசாலையினால் இயலுமான ஒவ்வொரு வேலையிலும் மருந்துகள் வீனாவதை தடுக்க தேவையான நடவடிக்கை எடுத்திருந்த போதும் கனிசமான அளவு மருந்துகள் காலாவதியாகியுள்ளன. முழுத் தீவிலும் அனைத்து வைத்தியசாலைகளிலும் இந் நிலைமை பொதுவாக காணப்பட்டது.<br><br>மேலும், கொரோனா காலத்தினுள் ஏனைய நாடுகளில் இருந்து (கொழும்பு மருந்து களஞ்சியம்) பாரியளவில் உதவியாக மருந்து கிடைத்திருந்ததுடன் கட்டளை இன்றி அந்த மருந்துகளை வைத்தியசாலைகளிற்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. அந்த மருந்துகளில் அதிகளவு காலாவதியாக அன்மித்து இருந்தவைகளாகும். அந்த விடயங்கள் காரணமாக அதிகளவு மருந்துகள் காலாவதியான மருந்துகளாக களஞ்சிப்படுத்த வேண்டியிருந்தன. | காலாவதியாக முன்னர் மருந்துகளை பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் காலாவதியான மருந்துகளை முறையாக வெளியேற்ற வேண்டும். |

**(ஆ) வெளிப்படையான முறைகேடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2018 ஆண்டு முதல் 2021 வரை வெலிமட ஆதார வைத்தியசாலையினால் பொரலந்த, போகஹகும்புர மற்றும் ஊவா பரனகம ஆகிய பிராந்தி வைத்தியசாலைகளிற்கு விநியோகித்த 09 மருந்து வகைகளிற்குரிய விநியோகக் கட்டளை மற்றும் பெறுவனவுக் கட்டளை ஒப்பிடுகையில் ரூபா 2,402,678 பெறுமதியான மருந்துகளின் பற்றாக்குறை காணப்பட்டன. பற்றாக்குறை தொடர்பாக இதுவரை எவ்வித விசாரணையும் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | எமது திணைக்களத்தினால் பண்டாரவலை விஷேட குற்றப் புலனாய்வு பிரிவிற்கு செய்த முறைப்பாட்டின் பிரகாரம் வெலிமட ஆதார வைத்தியசாலையின் மருந்து களஞ்சியத்தில் இடம் பெற்றுள்ள ஒழுங்கீனம் தொடர்பாக பண்டாரவல பொலீஸினால் மருந்தக நிபுணர் திரு டப்லி.எம். துமிந்த தேசப்பிரிய திசானாயக அவர்களை 2024 பெப்ரவரி 14 திகதி கைது செய்து 2024 பெப்ரவரி 15 திகதி வெலிமட நீதவான் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அத் திகதி முதல் சிறைப்படுத்தப்பட்டுள்ளார். அதன் பிரகாரம் ஊவா மாகாண சுகாதார அமைச்சின் செயலாளரின் இலக்கம் 5/AD/8/232 மற்றும் 2024 பெப்ரவரி 19 திகதிய கடிதம் மூலம் அவரின் கடமை பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளது.<br><br>அது தொடர்பாக எமது திணைக்கள மட்டத்தில் புலானாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், பண்டாரவலை விஷேட குற்றப் புலனாய்வு பிரிவின் மூலமும் புலனாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது, அதனால் இது தொடர்பாக முன் விபரங்களை பின்னர் வழங்க முடியும். | இருப்பு பற்றாக்குறை தொடர்பாக விரைவில் விசாரணை மேற்கொள்ள வேண்டியதுடன் பொறுப்புவாய்ந்த அலுவலரிற்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | 2019 ஆண்டு முதல் 2022 ஆண்டு வரை வெலிமட ஆதார வைத்தியசாலையின் மருந்து களஞ்சியத்தில் இருந்து வைத்தியசாலை கிளினிக்களிற்கு விநியோகிக்கப்பட்ட ரூபா 4,918,840 பெறுமதியான 06 மருந்துகள் குறித்த கிளினிக்களிற்கு கிடைத்திருக்காத காரணத்தால் நோயாளர்களிற்கு அந்த மருந்துகள் வழங்கப்பட்டு இருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

**(இ) விளைவற்ற மற்றும் குறை பயன்பாட்டு சொத்துக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | முன்கூட்டிய தேவைகளை இனங்காணாமல் பதுள்ள பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தினால் கொள்வனவு செய்திருந்த கூட்டுத் தொகை ரூபா 1,457,407 ஆன உபகரணங்கள் வைத்தியசாலைக்கு விநியோகிக்கப்பட்டு இருந்த போதும் வைத்தியசாலையினால் உபகரணங்களை பயன்படுத்தாது பதுள்ள பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்கு மீண்டும் ஒப்படைக்கப்பட்டிருந்தன. | நோயாளர்கள் பதிவு மற்றும் தனியார் சுகாதார இலக்கம் (Private Health Number -PHN) வழங்குவனூடாக சுகாதார வசதிகளை வழங்கல் மற்றும் அவர்களின் தகவல்களை பெற்றுக் கொள்வதனை வினைத்திறனாக மேற்கொள்ளல் இந்த கருத்திட்டத்தின் ஆரம்ப நோக்கமாவதுடன் PH Number மக்களிற்கு வழங்க Bar Cord Readers மற்றும் Card Printers வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டன. எனினும் அந்த அட்டைகளை அச்சிடும் போது அதற்காக தேவையான அட்டைகளிற்காக அதிக கிரயத்தை மேற்கொள்ள வேண்டிய காரணத்தால் Card Printers இற்கு பதிலாக சாதாரண அச்சுப் கடதாசியை பயன்படுத்த முடியுமான Printers பயன்படுத்த தீர்மானிக்கப்பட்டது. | தேவைப்பாட்டை சரியாக இனங்கண்டு கொள்வனவு செய்ய வேண்டும். |
| (ii) | 2019 முதல் 2023 வரையான காலப் பகுதியில் கொள்வனவு செய்யப்பட்டு இருந்த ரூபா 11,082,139 பெறுமதியான 04 வகைக்குரிய 99 மருத்துகள் மற்றும் ஏனைய அலுவலக உபகரண அலகுகள் 2023 ஜுலை 04 திகதியளவிலும் எதிர்பார்த்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்படாது, விளைவற்று காணப்பட்டன. | தற்போது ‘‘சுவஸ்டார்’’ நிகழ்சித் திட்டம் முழுமையாக செயற்படு நிலைக்கு வந்துள்ளதுடன் மருந்து கோருதல் மற்றும் விநியோகித்தல், உள்ளிட்ட வைத்திசாலை பராமரிப்பு பணிகள் Digital செயன்முறையின் பிரகாரம் செயற்படுகின்றது. அதன் பிரகாரம் தற்போதளவில் இந்த நிகழ்சித் திட்டத்தை செயற்படுத்தும் வைத்தியசாலை மற்றும் சுகாதார நிறுவனங்களின் பலவித தேவைகளை இனங்கண்டு மேற்குறித்த உபகரணங்களை பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.<br><br>தற்போதளவில் எமது அலுவலகத்தின் மூலம் அந்த கோரிக்கைகளை ஆய்வு செய்து தேவையான உபகரணங்களை அந்த நிறுவனத்திற்கு பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் 2023 திசெம்பர் இறுதிக்கு முன்னர் ஐயவினாவில் குறிப்பிடப்படும் அனைத்து குறை | எதிர்பார்த்த நோக்கத்தை அடைந்து கொள்வதற்காக குறித்த உபகரணங்களை பயன்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பயன்பாட்டு உபகரணங்களையும் சரியான பயன்பாட்டை பெற்றுக் கொள்ள இயலுமானவாறு பகரிந்தளித்து முடிவுறுத்துவதாக மேலும் அறிவிக்கிறேன். | |
| (iii) | 2022 ஆண்டில் கொள்வனவு செய்து வெல்லவாய ஆதார வைத்தியசாலைக்கு விநியோகித்துள்ள கூட்டுத் தொகை ரூபா 11,090,200 ஆன 06 வைத்திய உபகரணங்கள் கணக்காய்வு திகதிய 2023 ஜுலை 18 திகதியளவிலும் மருந்து களஞ்சியத்தில் விளைவற்று களஞ்சியப்படுத்தப்பட்டு இருந்தன. | இவ்வறிக்கையில் குறிப்பிடப்படும் அனைத்து உபகரணங்களையும் வெல்லவாய ஆதார வைத்தியசாலையில் தற்போது நிர்மாணிக்கப்பட்டு வரும் அறுவை சிகிச்சை கூடத்தின் பயன்பாட்டிற்கு கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்களாகும். அறுவை சிகிச்சை கூடத்தின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட உடனேயே இந்த உபகரணங்களை பயன்பாட்டிற்கு எடுக்கப்படும். | வைத்திய உபகரணங்களை விளைவற்று வைத்திருக்காது பயன்படுத்த வேண்டும். |

**(ஈ) சுகாதார ஆளணியினர்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வெள்ளவாய ஆதார வைத்தியசாலைக்குரிய 2023 நவம்பர் 23 திகதி தயாரித்து சமர்ப்பிக்கப்பட்ட ஆளணியினர் அறிக்கையின் பிரகாரம் அத்திகதியில் அங்கீகார மற்றும் உள்ளவாறான ஆளணியினரை ஒப்பிடுகையில் 08 பதவிகளில் 31 மிகை ஆளணியினர் இருக்கும் போது மேலதிக நேர கொடுப்பனவாக ரூபா 26,036,153 தொகையும் விடுமுறை தின படிகளாக ரூபா 15,285,884 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. | 2017 ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினரின் பிரகாரம் அந்த எண்ணிக்கையின் ஊடாக வைத்தியசாலை சேவைகள் விரிவானதால் சேவையை பெற்றுக் கொள்வது கடினமாகும். அதனால் அங்கீகார ஆளணியினரிலும் அதிக எண்ணிக்கையினரை சேவையில் ஈடுபடுத்த நேரிடுகிறது.<br>❖ இரத்த மாற்று சுத்திகரிப்பு அலகில் கடமையை 24 மணி நேரமும் வழங்க வேண்டும்.<br>❖ அறுவை சிகிச்சை வாட்டு (ஆண் / பெண்) ஆரம்பிக்கப்பட்டமை, **மத்திய ஆரம்பிக்கப்பட்டமை**.<br>❖ நோயாளர் வண்டிச் சேவை விரிவானமை.<br>❖ நீதிமன்ற மருத்துவ சேவைகள் விரிவானமை.<br>❖ கண் பிணியாய், மனநோய் பிணியாய். | ஆளணியினரை மீளாய்வு செய்து தேவையான ஆனணியினரை அங்கீகரித்துக் கொள்ள வேண்டும். |

| | | |
|---|---|---|
| | ❖ சாதாரண நிர்வாக நடவடிக்கைகள்.<br><br>போன்ற காரணங்களினால் அங்கீகார ஆளணியினரிலும் அதிக ஊழியர் எண்ணிக்கை இருந்த போதும் மேலதிக நேர படிகள் செலுத்த நேரிடுகிறது. | |

### 1.5.10 தலைப்பு 711 – கல்வித் திணைக்களம்

### (அ) செயற்பாட்டு செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | ஊவா மாகாணத்தில் 04 வலயக் கல்விக் காரியாலயங்கள் 2021 மற்றும் 2022 ஆண்டுகளில் பாடசாலை மாணவர்களிற்கு தேவையான சீருடை கட்டளையிடும் போதும் அளவை சரியாக மதிப்பிடாது கட்டளையிட்ட காரணத்தால் 47 வகைகளிற்குரிய ரூபா 2,469,687 பெறுமதியான 6424 தொகுதிகள் அந்த அலுவலகங்களில் களஞ்சியத்தில் மற்றும் அபிவிருத்தி பிரிவில் குவிக்கப்பட்டு இருந்தன. காலதாமதத்துடன் சீருடை புடவைகளின் நிறம் மாற்றமடைத்தல், துரப்பிடித்தல் போன்ற விடயங்களின் மீது பயன்படுத்த முடியாதிருந்தது. | பாடசாலைகளில் அனைத்து அதிபர்களிற்கும் உரிய வகைகளில் மற்றும் அளவுகளில் சீருடைகளை கட்டளையிட அறிவுரை வழங்கப்பட்டுள்ளதுடன், அந்த கட்டளைகள் பற்றிய பொழிப்பு அறிக்கையொன்றை தயாரிக்கவும் மேலும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. 2023 ஆண்டில் மேலதிகமாக காணப்படும் சீருடை தொடர்பாக வலய மட்டத்தில் கஷ்ட மற்றும் மிகக் கஷ்ட பாடசாலைகளிற்கு பகிர்ந்தளிப்பதற்காக ஆவணங்களை தயாரித்து ஊவா மாகாண கல்வி அமைச்சின் செயலாளரின் ஊடாக கல்வி அமைச்சு இசுருபாயவிற்கு அங்காரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு உள்ளதுடன், இதுவரை அதற்காக அங்கீகாரம் கிடைக்காததுடன் அங்கீகாரம் கிடைத்த பின்னர் தயாரித்துள்ள ஆவணங்களின் பிரகாரம் அந்த மேலதிக சீருடைகளை பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | பாடசாலை சீருடை தேவைப்பாட்டை திட்டவட்டமாக கணக்கிட்டு சீருடை கட்டளையிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | இரட்டை கல்விப் பிரிவு அபிவிருத்தி நிகழ்சித் திட்டத்தின் (SESIP) கீழ் ‘‘தமது பிரதேசத்தில் நிலவும் கைத்தொழில்களிற்கு உரியதாக அவற்றின் ஆக்கபூர்வதன்மையை மேம்படுத்த முடியுமான | இது தொடர்பாக அறிவூட்டும் நிகழ்சித் திட்டமொன்றை 2023 திசெம்பர் 18 மற்றும் 19 இரண்டு நாள் அதிபர் மற்றும் புத்தாக்க விடய ஆசிரியர்களிற்கு நடாத்தப்பட்டது. அங்கு மொ/கதரகம தேசிய பாடசாலை மாணவர்களினால் நீரில் உள்ள | கருத்திட்ட நோக்கத்தின் பிரகாரம் ஏற்பாட்டை பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| புதிய முறைகள் பற்றி ஆய்வு செய்தல் மற்றும் அதன் பிரகாரம் பொருத்தமான கருவிகளை தயாரிப்பதன் ஊடாக பிரதேசங்களில் போன்றே மொத்த தேசிய உற்பத்தியை உயர்த்த பங்களிப்பு செய்ய மாணவப் பருவத்திலிருந்து இடமளித்தல்'' நோக்காகக் கொண்டு போன்றே பாடசாலை மாணவர்களின் ஆக்கரீதியான திறமை, தர்க்க ரீதியான கற்பனை, குழு செயற்பாடு, சிறந்த தொடர்பாடல் மற்றும் சவால்களிற்கு முகம் கொடுக்கும் திறமையை விருத்தி செய்வதனை நோக்காகக் கொண்டு, பாடசாலைக்கு ரூபா 44,000,000 நிதி ஏற்பாடு வழங்கி 2023 ஜூலை 31 திகதியளவில் 1 ½ ஆண்டுகள் கடந்திருந்த போதும், எதிர்பார்த்த நோக்கத்தை அடைந்திருக்கவில்லை. | ஆகிரமிக்கத்தக்க மூலிகைகளை திரட்டும் கருவியொன்றை தயாரித்துள்ளதாகவும், மொ/மல்லாத்தாபல தேசிய பாடசாலை மாணவர்களினால் color light கருவியொன்றையும் ப/தர்மபால வித்தியால மாணவர்களினால் விவசாய உற்பத்தி சார்ந்த பரீட்சிப்பை மேற்கொள்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது. பாடசாலை மாணவர்களின் விருப்பு காணப்படுவது ரொபோ தொழிநுட்பம் மற்றும் புதிய கணனி தொழிநுட்பத்திற்கு ஆவதுடன், பிராந்திய பிரச்சினைகளிற்கு தீர்வு தேடுவதற்கு ஈடுபட பிற்போக்கு காட்டுகின்றனர். அதன் பிரகாரம் அந்த ரொபோ தொழிநுட்பம் மற்றும் புதிய கணனி தொழிநுட்பத்திற்கு உரியதான ஆக்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. | |

**(ஆ) சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மண்சரிவு ஆபத்தான நிலைமையொன்று ஏற்பட்டுள்ள நிலமொன்றில் கட்டிடம் நிர்மாணிக்க முன்னர் உரிய சாத்தியப்பாட்டு ஆய்வொன்றை மேற்கொண்டு தேசிய கட்டிடங்கள் ஆராய்சி நிறுவனத்தின் (NBRO) அறிக்கையொன்றை பெற்று அதன் பரிந்துரையின் மீது நிர்மாணம் மேற்கொள்ள வேண்டிய போதும் அவ்வாறு செய்யாது ரூபா 3,414,036 தொகை செலவில் ப/சீவலி மகா வித்தியாலய நிலத்தில் நிர்மாணித்திருந்த | வித்தல் சரிவதற்கு தீர்வாக பாதுகாப்பு பக்க மதில் நிர்மாணிக்க வேண்டியதால் அதற்காக பெறுகைகள் நடவடிக்கை மேற்கொண்டு, தற்போது முதலாம் கட்டமாக நிரமாணம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வித்தலின் மேற்பகுதியில் காணப்படும் மலசலகூடங்களின் மழை நீரை பாடசாலை பிரதான கால்வாயிற்கு செலுத்துவதற்கு மேற்படி ஒப்பந்தத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளது.<br><br>தற்போது இரண்டு மலசலகூடத் தொகுதிகளும் பயன்படுத்தப்படுகின்றன. | மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் நிர்மாணம் மேற்கொள்ள முன்னர் தேசிய கட்டிடங்கள் ஆராய்சி நிறுவனத்தின் (NBRO) பரிந்துரையை பெற்றுக் கொள்ள வேண்டும். |

| | | |
|---|---|---|
| இரண்டு கழிவறை தொகுதியின் பிரவேச வாயின் அருகிற்கு மண்சரிவு காரணமாக ஆபத்தான நிலைமையின் மீது பயன்படுத்த முடியாதிருந்தது. | | |

**(இ) விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டு சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வெள்ளவாய வலய கல்விக் காரியாலயத்தில் களஞ்சிய பரீட்சிப்பின் போது பெறுமதியை இனங்காண முடியாத லேசர், HP மற்றும் Dell வகை 03 மடிக் கணனிகள் 2013 ஆண்டு முதல் பயன்படுத்தப்படாது விளைவற்று காணப்பட்டன. | வெள்ளவாய வலய கல்விக் காரியாலயத்தில் கணனி மற்றும் மென்பொருள் தொகுதிமய குழுவின் அங்கத்தவர்களினால் 2024 சனவரி 31 திகதி மேற்கொண்ட பரீட்சிப்பின் போது இந்த 03 மடிக் கணனிகளையும் தயாரிக்க தேவையான உபகரணங்களை பெற்றுக் கொள்ளும் கடினம் அதிக செலவு செய்ய வேண்டியமை போன்ற விடயங்களை அடிப்படையாகக் கொண்டு பயன்பாட்டிலிருந்து அகற்றுவது பொருத்தமென பரிந்துரைத்துள்ளது. | மடிக் கணனிகளை பயனுள்ளவாறு பயன்படுத்த பொருத்தமான செயற்பாடுகளை விரைவில் எடுக்க வேண்டும். |

**(ஈ) பாடசாலை ஆளணியினர்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | ஊவா மாகாண கல்வி திணைக்களத்திற்குரிய 06 வலயங்களினுள் முறையாக ஆசிரியர் சமநிலை மேற்கொள்ளமை காரணமாக அங்கீகார ஆசிரியர் எண்ணிக்கையை விஞ்சி ஆசிரியர்களை நியமித்து மிகை ஆசிரியர் ஆளணியை பேணிச் செல்வதால் 382 கிராமிய பாடசாலைகளில் 2214 ஆசிரியர் பற்றாக்குறை நிலவியதுடன் 165 நகர்புற பாடசாலைகளில் 583 ஆசிரியர்களின் மிகை காணப்பட்டது. மியை ஆசிரியர்களிற்கு 2022 சனவரி 01 முதல் 2023 திசெம்பர் 31 வரை சம்பளமாக ரூபா 549,754,310 செலுத்தப்பட்டு இருந்தது. | அனைத்து வலய கல்விக் காரியாலயத்தினால் வருடாந்த இடமாற்றம் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அதன் மூலம் ஆசிரியர்களை சமப்படுத்த நடடிவக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மாகாணத்தினுள் ஒழுங்கு முறையாக ஆசிரியர் சமப்படுத்தலை பேணிக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | பண்டாரவலை, வெலிமட கல்வி வலயம் 02 இற்குரிய சில பாடசாலைகளில் பிரதி மற்றும் உதவி அதிபர் பதவிகளில் பற்றாக்குறை காணப்பட்ட போதும் அந்த வலயங்களிலேயே சில பாடசாலைகளில் அங்கீகார எல்லையை விஞ்சி 26 பிரதி மற்றும் உதவி அதிபர் பதவிகளும் 2021 மே 01 முதல் 2023 ஒக்டோபர் 31 வரையான காலத்தினுள் மாத்திரம் சம்பளமாக ரூபா 43,762,329 செலுத்தப்பட்டு இருந்தது. | பாடசாலைகளில் அங்கீகார எல்லைக்கு அதிகமாக நியமிக்கப்பட்டுள்ள பிரதி மற்றும் உதவி அதிபர்களை இடமாற்ற தற்போது நடவடிக்கை எடுத்துள்ளதாக குறிப்பிடுகிறேன். | ஒழுங்கு முறையான ஆளணியினர் சமப்படுத்தலின் ஊடாக அந்த அதிபர்களின் ஆக்கபூர்வ மற்றும் வினைத்திறனான சேவையை பெற்றுக் கொள்ள இயலுமானவாறு வெற்றிடம் காணப்படும் பாடசாலைகளிற்கு இணைத்து சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) | ஆதிபர் பதிவிகளில் பதில் கடமைபுரிந்த இலங்கை ஆசிரியர் சேவையின் அலுவலர்களை இலங்கை அதிபர் சேவைக்கு ஆட்சேர்ப்பது தொடர்பான இலக்கம் அமப/12/1101/530/035 மற்றும் 2012 ஆகஸ்ட் 08 திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் ஊவா மாகாணத்தில் 10 வலயங்களிற்குரிய 118 பாடசாலைகளில் கடமையில் ஈடுபட்டுள்ள 120 ஆசிரியர்களை இலங்கை அதிபர் சேவையின் 2 வகுப்பின் II தரத்திற்கு நியமித்து இருந்ததுடன், நியமனக் கடித நிபந்தனை பிரகாரம் சம்பளம் பெற்றுக் கொள்ளும் உரிமை தவிர வேறு எவ்வித உரிமையும் கிடைப்பதில்லை என குறிப்பிட்டு இருக்கும் போது நிபந்தனைகளிற்கு இணங்காதவாறு 110 அதிபர்களிற்கு 2013 ஆண்டு முதல் 2023 ஒக்டோபர் 31 வரை அதிபர் படிகளாக ரூபா 22,972,094 செலுத்தப்பட்டிருந்தது. | கல்வி அமைச்சின் செயலாளரின் இலக்கம் ED/4/60/01/13 மற்றும் 2009 பெப்ரவரி 26 திகதிய கடிதம் மூலம் அதிபர்களிற்கு விஷேட படிகளை வழங்குவது தொடர்பாக அறிவுறுத்தல் செய்யப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அத்திகதி முதல் அதிபர்களாக கடமையாற்றும் அதிபர் தரமுடைய மற்றும் தரமற்ற எனினும் அதிபர்களாக பதில் கடமைபுரியும் உப ஆசிரியர்களிற்கு மாதாந்தம் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. கல்வி அமைச்சின் செயலாளரின் இலக்கம் ED/4/60/01/அ.படிகள்/2017 மற்றும் 2017 மார்ச் 14 திகதிய கடிதம் மூலம் மற்றும் சுற்றறிக்கை இலக்கம் 16/2017 பிரகாரம் அதிபர்களிற்காக வழங்கும் விஷேட படிகள் திருத்தப்பட்டுள்ளன. அந்த திருத்திய படிகள் அதிபர்களான கடமையாற்றும் மற்றும் அப் பதவிகளில் பதில் கடமைபுரியும் அலுவலர்களிற்கு 2017 ஆண்டு மார்ச் மாதாம் முதல் செலுத்தப்பட்டுள்ளது. ஊவா மாகாண ஆளுனரின் கையொப்பத்துடன் கூடிய ஊவா மாகாண பிரதான செயலாளரிற்கு | நியமனக் கடிதம் சுற்றறிக்கையிற்கு பின்னர் விநியோகிக்கப்பட்டு உள்ளதால் நியமன் கடிதத்தின் நிபந்தனைகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அனுப்பப்பட்டுள்ள இலக்கம் 1/3/7-ix மற்றும் 2018 செப்டம்பர் 29 திகதிய கடிதம் மூலமும் பதில் கடமைபுரியும் அதிபர்களிற்காக விஷேட படிகளை செலுத்த அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.<br><br>ஊவா மாகாண கல்வி அமைச்சின் செயலாளரின் கையொப்பத்துடன் அனைத்து வலய கல்வி பணிப்பாளர்களிற்கும் பிரதியுடன் ஊவா மாகாண கல்வி பணிப்பாளரிற்கு அனுப்பப்பட்ட இலக்கம் 9/ஆ/8 மற்றும் 2018 ஒக்டோபர் 03 திகதிய கடிதம் மூலமும் பதில் கடமைபுரியும் அதிபர்களிற்கு விஷேட படிகயை செலுத்த அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.<br>மேற்குறித்த சுற்றறிக்கைகள் மற்றும் கடிதங்களை அடிப்படையாகக் கொண்டு அதிபர்களிற்காக அதிபர் படிகள் செலுத்தப்பட்டுள்ளன. | |
| (iv) | ஊவா மாகாணத்தினுள் ஆய்வுகூடம் அற்ற 27 பாடசாலைகளிற்காக 32 ஆய்வுகூட உதவி ஊழியர்களையும், நூலகம் இல்லாத 14 பாடசாலைகளிற்கு 17 நூலக உதவி ஊழியர்களையும் நியமித்து அந்த ஊழியர்களை நியமித்த நோக்கத்தை அடைந்து கொள்ளாது விளைவற்ற ஆளணியினரை பேணிக் கொண்டு 2022 சனவரி 01 முதல் 2023 திசம்பர் 31 வரையான காலத்தினுள் அவர்களிற்கு சம்பளமாக ரூபா 28,621,714 செலுத்தப்பட்டிருந்தது. | ஆய்வுகூட உதவி ஊழியர்கள் மற்றும் நூலக உதவி ஊழியர்களை ஆய்வுகூடம் மற்றும் நூலகங்கள் செயற்படும் பாடசாலைகளிற்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஆய்வுகூட உதவி ஊழியர்கள் மற்றும் நூலக உதவி ஊழியர்களை அந்த வசதிகள் காணப்படும் பாடசாலைகளில் சேவைக்காக ஈடுபடுத்த வேண்டும். |
| (v) | ஊவா மாகாண 07 கல்வி வலயங்களில் 410 பாடசாலைகளில் 2302 ஆசிரியர் பற்றாக்குறை காணப்பட்ட போதும் அந்த கல்வி வலயங்களின் பாடசாலைகளிற்கு நியமனம் கிடைத்த 99 ஆசிரியர்களை அந்த கல்வி வலயத்திற்கு வெளிப் பாடசாலைகளிற்கு மற்றும் தேசிய | உள்ளூராட்சி தேர்தலிற்காக நியமனம் வழங்கிய ஆசிரியர்கள் போன்றே, மருத்துவ காரணம் போன்றே பிரசவத்திற்கு அன்மித்த அலுவலர்களின் கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு இணைப்பு | இணைக்காது வருடாந்த இடமாற்ற கொள்கையை உரியவாறு செயற்படுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| பாடசாலைகளிற்கு இணைத்து 2007 ஜுன் முதல் 2023 திசெம்பர் வரை வலயத்தினுள் நியமனங்களிற்குரிய வலய கல்விக் காரியாலயத்தினால் அவர்களின் ஆரம்ப பாடசாலைக்கு உரியதாக சம்பளமாக ரூபா 38,446,523 செலுத்தப்பட்டிருந்தது. | மேற்கொள்ளப்பட்டுள்ளது. | |

**(உ) சொத்துக்களிலிருந்து பெறவேண்டிய வருமானம் பெறப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 04 கல்வி வலயங்களில் 549 ஆசிரியர் அதிபர் அரச உத்தியோகபூர்வ இல்லங்களில் 77 இனை பாவிக்க முடியாதவாறு பழுதடைந்து அல்லது குறை பயன்பாட்டுடன் காணப்படுகின்றன. | மஹியங்கனை கல்வி வலயத்தில் பாடசாலைகளின் உள்ளே அமைந்துள்ள 199 ஆசிரியர் இல்லங்களில் 94 ஆசிரியர் இல்லங்களில் வதிவாளர்கள் இருப்பதுடன், எஞ்சிய 105 இல்லங்களில் 27 ஆசிரியர் இல்லங்கள் 2024 ஆண்டில் திருத்துவதற்காக அபிவிருத்தி திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | உத்தியோகபூர்வ இல்லங்கள் பழுதடைந்து செல்வதனை தவிர்த்து பிரயோசனப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.5.11 தலைப்பு 712 – உள்ளூாட்சி திணைக்களம்**

**(அ) உள்ளூராட்சி அதிகார சபை மேற்பார்வை**

**நிலுவை வருமானம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டு மற்றும் கடந்த ஆண்டிற்காக ஊவா மாகாணத்தின் 28 உள்ளூராட்சி நிறுவனங்களிற்குரிய கிடைக்க வேண்டிய வீதவரி மற்றும் ஏனைய வருமானம் கூட்டுத் தொகை ரூபா 1,245,683,636 தொகை மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரையும் அறவிடப்பட்டு இருக்கவில்லை. | இந்த நிலுவை வருமானம் முன்னைய ஆண்டுகளிலிருந்து உள்ளூராட்சி நிறுவனங்கள் முன்கொண்டு வந்த நிலுவை வருமான மீதியாகும். 2020 மற்றும் 2021 ஆண்டுகளில் நிலவிய கொரோனா தொற்று நிலைமையின் முன் மற்றும் 2022 ஆண்டு நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடி காரணமாக இந்த நிலுவை வருமானத்தை அறவிடும் நடவடிக்கைகளை எதிர்பார்த்த அமைப்பில் மேற்கொள்ள முடியவில்லை. | சட்டம், நிதி மற்றும் நடைமுறை விதி மற்றும் துணை விதிகளின் பிரகாரம் நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | இது தொடர்பாக 2022 ஆண்டு இடம்பெற்ற கணக்காய்வு முகாமைத்துவ குழுக்களிலும் கலந்துரையாடப்பட்டது. அதன் பிரகாரம் நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடுவதற்காக தேவையான அறிவுரைகள் உள்ளூராட்சி நிறுவனங்களிற்கு தற்போது வழங்கப்பட்டுள்ளன. | |
| (ii) | மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (252), (255) பிரிவு மற்றும் 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் உள்ளூராட்சி நிறுவனங்களிற்கு அறவிட வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் கூட்டுத் தொகை ரூபா 134,107,125 தொகை மற்றும் முத்திரைக் கட்டண கூட்டுத் தொகை ரூபா 290,178,301 உள்ளூராட்சி நிறுவனங்களிற்கு கிடைத்திருக்கவில்லை. | 2023 சனவரி 01 முதல் 2023 திசெம்பர் 31 வரை ஊவா மாகாண ஆளுனர் அவர்களினால் அங்கீகரித்த அனைத்து நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணத்தை உரிய உள்ளூராட்சி நிறுவனங்களிற்கு செலுத்தப்பட்டுள்ளது. | உரிய சட்ட ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**(ஆ) விநியோகிக்கப்பட்ட மிகை அறவீட்டு சான்றிதழிற்காக அறவிட வேண்டியுள்ள தொகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று ஊவா மாகாண உள்ளூராட்சி அதிகார சபை அலுவலர்கள் மற்றும் அங்கத்தவர்களிற்கு விதித்திருந்த மிகை அறவீடுகளிற்காக கூட்டுத் தொகை ரூபா 4,343,581 தொகை அறவிட வேண்டியதாக காணப்பட்டது. | மிகை அறவீட்டுத் தொகையை விரைவில் அறவிடுவதற்காக தேவையான அறிவுறுத்தல் உள்ளூராட்சி நிறுவனங்களிற்கு தற்போது வழங்கப்பட்டுள்ளது. | உள்ளூராட்சி நிறுவனங்களிற்கு உரிய சட்டங்களின் ஏற்பாடுகள் பிரகாரம் மிகை அறவீட்டு தொகை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**(இ) வாகன பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 மே 09 திகதி இடம்பெற்ற போராட்ட சந்தர்ப்பத்தில் மீகஹகிவுள பிரதேச சபைக்கு சொந்தமான கெப் வண்டி | 2022 மே 09 திகதி இடம்பெற்ற போராட்ட சந்தர்ப்பத்தில் மீகஹகிவுள பிரதேச சபைக்கு சொந்தமான கெப் வண்டி ஒன்று போராட்ட மோதலிற்கு இடையே | பொறுப்புவாய்ந்த தரப்பினரை இனங்கண்டு நட்டத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| ஒன்றை முறையற்று மற்றும் அனுமதியின்றி கொழும்பு நகர சபைக்கு கொண்டு சென்று திரும்பி வரும் போது நபர்களின் தாக்குதலிற்கு உட்பட்டு சேதமடைந்திருந்ததுடன் அங்கு அரச சொத்திற்கு சேதமேற்பட பொறுப்புவாய்ந்த தரப்பினரை இனங்கண்டு நட்டத்தை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. சேதமடைந்த வாகனத்தின் காப்புறுதி உரிமையை பெற்றுக் கொள்ள சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு இருந்தது. | தீபற்றி சேதமடைந்ததுடன், இந்த வண்டியின் பதிவு சான்றிதழ் தற்போது அத்தனகல்ல உயர் நீதிமன்றத்தில் வழக்கு பொருளாக வைத்துக் கொண்டு கெப் வண்டியை பிணைமுறி ஒன்றிற்கு கீழ் மீகஹகியுள சபை செயலாளரின் பெயரில் விடுவிக்கப்பட்டுள்ளது. (வழக்கு இலக்கம் - B 1072/22).<br><br>அவ்வாறே, வண்டியின் பதிவுச் சான்றிதழில் மூலப் பிரதியை காப்புறுதி நிறுவனத்திற்கு வழங்கிய பின்னர் மொத்த காப்புறுதி உரிமை தொகையை தீர்க்க காப்புறுதி நிறுவனம் இணங்கியுள்ளதுடன் (காப்புறுதி உரிமை இலக்கம் V/CH/1/010/1035842/2022), தற்போது மொத்த உரிமை தொகையையும் பெற்றுக் கொள்வதற்குரிய சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |

### 1.5.12 தலைப்பு 714 – விவசாய திணைக்களம்

### (அ) முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| விவசாய திணைக்களத்தில் இடம்பெற்றிருந்த நிதி மோசடிக்கு 10 ஆண்டுகளிற்கு அதிக காலம் கடந்திருந்ததுடன் 2023 திசெம்பர் 31 திகதியன்று நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட தீர்க்கப்படாத மீதி ரூபா 440,990 ஆகும் | பணம் காணாமல் போய் 21 ஆண்டுகள் கடந்துள்ள போதும் குறித்த மீதி தொடர்ந்தும் காணப்படுவது அது தொடர்பான ஆரம்ப புலனாய்வின் போது பொறுப்வாய்ந்தவர்கள் யார் என திட்டவட்டமாக அறிவிக்கப்படாததால் ஆகும். இது தொடர்பாக நிலவிய வழக்கு தீர்பினால் முன்னால் பதுள்ளை பிரதி விவசாய பணிப்பாளர் அலுவலகத்தின் பணம் தொடர்பாக செயற்பட்ட பிரதான எழுதுனர் திருமதி ஏ.எம்.லீலாவதி குற்றமற்றவர் என விடுவிக்கப்பட்டுள்ளார். அவர் 2021 ஜுலை 07 திகதி மரணித்துள்ளதாகவும் இது தொடர்பாக எடுக்க வேண்டிய முன்நவடிக்கை பற்றி கண்டறிந்து இந்த தொகையை பதிவழிப்பது தொடர்பாக கணக்காய்வு மற்றும் | மாகாண நிதி விதி 104 பிரகாரம் விசாரணை மேற்கொண்டு தீர்க்கப்படாத மீதியை பொறுப்வாய்ந்த அலுவலர்களிடமிருந்து விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

முகாமைத்துவ குழு மூலம் முன்நடவடிக்கை எடுக்கிறேன்.

### (ஆ) எதிர்பார்த்த நலன்களை (Out Come) அடைந்து கொள்ளாமை

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | “சௌபாக்கி நோக்கு” கொள்கை பிரகடனத்தின் பிரகாரம் நோயற்ற மற்றும் ஆக்கபூர்வ பிரஜைகளை உருவாக்கும் நோக்கில் நச்சு விசமற்ற உணவு வழங்கும் எண்ணக்கருவின் பிரகாரம் இரசாயன பசளை, இரசாயன பீடைகொல்லி மற்றும் இரசாயன புற்கொல்லிகள் இன்றி பயிரிட முடியுமான மொத்த விவசாயத்திற்காக இயற்கை பசளை மற்றும் ஏனை இயற்கை உள்ளீடுகளை மாகாண மட்டத்தில் உற்பத்தி செய்வதனை ஊக்குவிக்கும் நிகழ்சித் திட்டத்தை செயற்படுத்தும் முகமாக ஊவா மாகாண சபையினால் கமத்தொழில் இராஜாங்க அமைச்சின் ஏற்பாடு ரூபா 70.7 மில்லியனும், மாகாண விடய திட்டவட்ட ஏற்பாடு (PSDG) ரூபா 21.24 மில்லியனும், ஆக கூட்டுத்தொகை ரூபா 91.94 மில்லியன் செலவிட்டிருந்த போதும், 2024 மாரச் 15 திகதியளவில் நிகழ்சித் திட்டத்தை செயற்படுத்துவது முழுமையாக நிருத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அந்த நிகழ்சித் திட்டத்திற்காக செலவிட்டு இருந்த ரூபா 91.94 மில்லியனான தொகை விளைவற்ற செலவொன்றாக இருந்ததாக பின்வரும் விடயங்களினால் உறுதியாகின்றது. | | |
| (i) | இயற்கை பசளை உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக ரூபா 15,000 இற்கு கீழாக நிதியுதவி உள்ளடங்கிய பொதியொன்றை வழங்க திட்டமிட்டு மொனராகல மாவட்டத்தில் 1686 நலன்பெறுனர்களிற்கு மற்றும் பதுள்ள மாவட்டத்தில் 2268 நலன்பெறுனர்களிற்கு பொதியின் பொருள் உதவி மாத்திரம் வழங்கி எப்பாவல ரொக் பொஸ்பேட் 800,000 | பொதி வழங்கப்பட்ட காலத்தில் இருந்து ஏனைய பொருள் உதவியை பயன்படுத்தி கனிசமான அளவு இயற்கை பசளை உற்பத்தி செய்துள்ளதுடன் தற்போதும் அந்த பொதியை பயன்படுத்தி பயன்படுத்தி இயற்கை பசளை உற்பத்தி செய்தல் இடம்பெறுகின்றது. அந்த இயற்கை பசளை | தரமான இயற்கை பசளை உற்பத்திக்கு தேவையான பொருட்களை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கிலோ கிராம் வழங்காத காரணத்தால் எதிர்பார்த்த பொஸ்பேட் உடன் 26,000 மெட்ரிக் டொன் இயற்கை பசளையை உற்பத்தி செய்ய இயலாதிருந்தது. அதன் பிரகாரம் கருத்திட்டத்திற்கு செலவிட்டிருந்த ரூபா 32,350,920 ஆன செலவு முழுமையாக விளைவற்ற செலவாக ஆகியிருந்தது. | வீட்டுத் தோட்டம் மற்றும் சிறிய அளவிளான பயிச் செய்கைகளிற்கு பயன்படுத்தப்படுகின்றது. அந்த பொருள் ரீதியான உதவிகளை வழங்கியதன் ஊடாக வீட்டு மட்டத்தில் இயற்கை பசளை பிரபல்யமானதுடன் அது விளைவற்ற செலவொன்றல்ல என குறிப்பிடுகிறேன். | |
| (ii) | இயற்கை பசளை உற்பத்தி செய்ய தேவையான கொம்போஸ்ட் அளவின் 50 சதவீதத்தை பிரதேசத்தின் உள்ளே உற்பத்தி செய்து கொள்வது நிகழ்சித் திட்டத்தின் முக்கிய நோக்கமான போதும் அதற்கு இணங்காதவாறு உற்பத்தி பொருட்களை கொள்வனவு செய்ய ரூபா 6,876,540 உம், பழப் பயிர்களை கொள்வனவு செய்ய ரூபா 10,768,850 உம் மரவள்ளி தண்டுகளை நடுவதற்கு 66 நலன்பெறுனர்களிற்கு ரூபா 1,780,000 தொகையும் பிபிள மாவட்ட கமநல பயிற்சி நிலையத்திற்கு மற்றும் பிந்துனுவெவ சேவை மீளாய்வு நிறுவனத்தில் பயிர்களை நிறுவுதல் மற்றும் நிலையான பெயர் பலகை கொள்வனவிற்கு ரூபா 1,798,250 உம் செலுத்தியிருந்ததால் செலவிட்டிருந்த மொத்த செலவில் 23 சதவீதம் நோக்கத்திற்கு இணங்காதவாறு செலவிடப்பட்டுள்ளது. | 2021 நவம்பர் 21 திகதியன்று புதிய செயற்பாடுகளுடன் திருத்திய திட்டம் பிரகாரம் செயற்பட்டதுடன், அதன் சில நோக்கங்களிற்கு இடையே ஒருங்கிணைந்த மூலிகை போசாக்கு முகாமைத்துவத்தை பயன்படுத்தி பழங்கள் மற்றும் ஏனைய பயிர்கள் மேம்படுத்தல், தோடை இறக்குமதியை மட்டுப்படுத்தியுள்ள பின்னனியில் தோடை உள்ளிட்ட பெங்கிரி பயிர் மேம்படுத்தலை அதிகரிக்கவும், இயற்கை பசளை பயன்படுத்தி மண்ணின் சுகாதார நிலையை உயர்த்தி உள்நாட்டு கிழங்கு பயிர் பயிரிடலை மேம்படுத்தலையும் நோக்காகக் கொண்டு பயிரிடல் பொருட்களை கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. | எதிர்பார்த்த நோக்கத்தை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## (இ) ஆளணியினர் நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஊவா மாகாண விவசாய திணைக்களத்தில் காவலாளர் இருவரின் மிகை காணப்படும் போதும் 2011 முதல் 2016 வரையான ஆண்டுகளினுள் அமைய அடிப்படையில் ஆட்சேர்த்த 05 காவலாளர்களிற்கு அக் காலத்தினுள் சம்பளமாக ரூபா 15,004,048 உம் | 2011 மற்றும் 2016 வரையான ஆண்டுகளினுள் அமைய அடிப்படையில் ஆட்சேர்த்த 05 காவலாளர்களும் விவசாய திணைக்களத்தில் இணைந்த நிறுனங்களிற்கு இணைக்கப்பட்டு சேவை செய்துள்ளதுடன், விவசாய திணைக்களத்தில் அமைய காவலாளர் பதவிக்கு நியமித்து | மிகை ஊழியர்களை சேவையில் ஈடுபடுத்தி பற்றாக்குறை ஊழியர்களை முறையாக ஆட்சேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேலதிக நேரம் மற்றும் விடுமுறை தின கடமைக்கான சம்பளமாக ரூபா 60,116 உம் செலுத்தப்பட்டிருந்தது. | அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அக் காலஎல்லையினுள் போதிய ஊழியர் எண்ணிக்கை இருக்காத காரணத்தால் பௌதீக மற்றும் மனித வளங்களின் பாதுகாப்பை உரியவாறு பேணிக் கொள்ள தடவை சேவை முறையின் கீழ் காவலாளர்கள் இந்த நிறுவனத்திற்கு பெறப்பட்டுள்ளனர். | |

### 1.5.13 தலைப்பு 715 – கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம்

**(அ) இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் தொடர்பு | இணங்காமைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| தாபன விதிக்கோவை | | | |
| தாபன விதிக்கோவை XIX ஆம் அத்தியாயத்தின் 5.6 ஆம் பந்தி | கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்திற்கு சொந்தமான 28 அரச இல்லங்களில் வதிவாளர்களிடமிருந்து முறையற்ற பொருளாதார வாடகை அறவிடப்படுவதன் காரணமாக மாகாண சபைக்கு ரூபா 2,962,571 வாடகை வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | 03 ஆண்டுகளை விஞ்சியுள்ள அனைத்து உத்தியோகபூர்வ இல்லங்களையும் மதிப்பிட மதிப்பீட்டு திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. குறித்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு அலுவலர்களிடமும் இல்ல வாடகை அறவீட்டை சீராக்கிக் கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். | தாபன விதிக்கோவை XIX ஆம் அத்தியாயத்தின் 5.6 ஆம பந்தி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**(ஆ) ஆளணியினர் நிர்வாகம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஊவா மாகாண அரச சேவையில் மற்றும் மாகாண அரச சேவையிற்கு இணைக்கப்பட்டுள்ள அலுவலர்களிற்கான இடமாற்ற கொள்கையின் 5.2.5(அ)(ii) பந்திக்கு இணங்காதவாறு 43 அலுவலர்கள் 05 ஆண்டுகளிற்கும் 22 ஆண்டுகளிற்கும் இடையிலான நீண்ட காலம் ஊவா | புதில் வழங்கப்படவில்லை. | ஊவா மாகாண அரச சேவையில் மற்றும் மாகாண அரச சேவையிற்கு இணைக்கப்பட்டுள்ள அலுவலர்களிற்கான இடமாற்ற கொள்கையின் |

| | | |
|---|---|---|
| மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தில் மற்றும் அத்திணைக்களத்தின் கீழுள்ள நிறுவனங்களில் சேவையில் ஈடுபட்டிருந்தனர். | | 5.2.5(அ)(ii) பந்தியிற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.5.14 தலைப்பு 716 – காணி ஆணையாளர் திணைக்களம்**

**(அ) வருமான முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| காணிகளை நீண்ட காலம் குத்தகை வழங்கியதற்காக காணி ஆணையாளர் நாயகம் வர்த்தக அடிப்படையில் குத்தயைாக வழஙய்கியிருந்த 122 நீண்ட கால குத்தகை அனுமதிப் பத்திரங்களிற்குரிய 122 குத்தகைதாரர்களிடம் இருந்து 2023 திசெம்பர் 31 திகதிக்கு ரூபா 139,242,705 ஆன நிலுவை தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | 122 குத்தகைதாரர்கள் தொடர்பாக வெவ்வேறாக குத்தகை செலுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், குத்தகை செலுத்துவதனை புறக்கனிப்பவர்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் இந்த திணைக்களத்திற்கு இல்லாததால் காணி ஆணையாளர் நாயகத்திற்கு முன்நடவடிக்கை எடுப்பதற்காக அனுப்பப்பட்டுள்ளன. | நிலுவை தொகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.5.15 தலைப்பு 718 – கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களம்**

**(அ) முகாமைத்துவ செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களம் 1991 ஆண்டு முதல் 2003 ஆண்டு வரை புடவை கடனிற்கு விற்பனைக்காக அறவிட வேண்டிய கூட்டுத் தொகை ரூபா 2,255,817 ஆன நிலுவை கடன் மீதிகள் 20 ஆண்டுகளிற்கு அதிக காலமாக அறவிட எவ்வித ஆக்கபூர்வ நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. | ஊவா மாகாண கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்தின் மூலம் புடவைகளை கடன் அடிப்படையில் விற்பனை செய்வது அரசாங்க அலுவலர்களிற்கு மாத்திரம் ஆவதுடன் வெளித் தரப்பினரிற்கு காசிற்காக மாத்திரம் விற்பனை செய்யப்படுகின்றது. கடன் அடிப்படையில் செய்யப்படும் விற்பனைக்காக கடன் தவணைகளாக அறவிடப்படுவதனால் இந்த நிலுவை கடன் மீதி கணக்கீட்டு தவறினால் காரணமாக ஏற்பட்டுள்ளது. உண்மையாக இவ்வாறான கடன் மீதயொன்று இல்லை. எதிர்காலத்தில் அந்த கடன் மீதிகளை பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | கடன் மீதியை அறவிட நடவடிக்கை எடுத்தல் அல்லது ஏனைய பொருத்தமான செயற்பாடுகளை எடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### (ஆ) வெளிப்படையான முறைகேடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2004 ஆண்டு முதல் 2019 ஆண்டு வரையான காலப் பகுதியினுள் சம்பளம் செலுத்துவதற்குரிய வவுசர் பத்திர மாதிரி பரீட்சிப்பிற்கு உட்படுத்தியதுடன் அங்கு குறித்த தொழிநுட்ப வியளாளர்களினால் முன்வைக்கப்பட்ட கூற்றின் பிரகாரம் ரில்பொல நெசவுத் தொழில் நிலையத்தின் 05 தொழிநுட்பவியளாளர்களிற்கு மேற்குறித்த காலத்திற்கு உரியதாக இருந்த ரூபா 777,606 ஆன சம்பளம் முன்னால் நிலையப் பொறுப்பு அலுவலரினால் மோசடியாக கையொப்பமிட்டு பெறப்பட்டு இருந்தது. | குழு அறிக்கை பிரகாரம் முன்நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடுகிறேன். | பொறுப்புவாய்ந்த மற்றும் கவனயீனமாக செயற்பட்ட அலுவலர்களிற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### (இ) வங்கிக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்தின் புடவை கைத்தொழில் முற்பணக் கணக்கிற்காக வர்த்தக வங்கியொன்றில் பேணப்பட்டிருந்த நடைமுறை கணக்கு ஒன்றிற்குரியதாக 2023 ஒக்டோபர் மாதத்திற்காக தயாரிக்கப்பட்ட வங்கி இணக்கக் கூற்றின் பிரகாரம் காட்டியிருந்த ரூபா 3,386,380 ஆன நேரடி செலவு வைப்பை வங்கியிடம் விசாரித்து இனங்கண்டு சீராக்க நவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இதுவரை இந்த மீதியில் ரூபா 1,689,994 அளவு இனங்காணப்பட்டுள்ளது. பல வங்கிக் கணக்குகள் காணப்படுவதால் அந்த கணக்குகளிற்கு இடையில் மாற்றல்கள் இடம்பெறுவதால் இந்த தவறுகள் இடம் பெற்றுள்ளது. எதிர் காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | நேரடி செலவு வைப்பை வங்கியிடம் விசாரித்து இனங்கண்டு சீராக்க நவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.5.16 தலைப்பு 722 – நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களம்**

**(அ) செயற்பாட்டு செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஊவா மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தினால் பேணிச் செல்லப்படும் வெலிமட, மஹியங்கன மற்றும் வெல்லவாய ஆகிய 03 நன்னடத்தை அலுவலகங்களிற்கு உரித்தான கட்டிடங்களை நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்காது மாதாந்த வாடகை அடிப்படையில் 05 ஆண்டு முதல் 11 ஆண்டு வரை காலத்தினுள் பேணிச் செல்வதுடன் வாடகையாக 2023 ஆகஸ்ட் வரை தனியார் பிரிவிற்கு செலுத்தியிருந்த தொகை ரூபா 5,059,500 ஆகும். | மஹியங்கன நன்னடத்தை அலுவலகத்தின் நிர்மாண வேலைகள் பூர்த்தியாகும் வரை தற்காலிக கட்டிடமொன்றை ஒதுக்கிக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன், வெலிமட நன்னடத்தை அலுவலகத்தை நிலைப்படுத்த வெலிமட பழைய நீதிமன்ற கட்டிடத்தில் ஓரிடத்தை ஒதுக்கிக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன், வெல்லவாய நன்னடத்தை அலுவலகத்தை பேணிச் செல்ல பொறுத்தமான இடமொன்று கிடைத்த பின்னர் நன்னடத்தை அலுவலகத்தை நிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கிறேன். | அரச கட்டிடங்களில் நன்னடத்தை அலுவலகங்களை நிலைப்படுத்த விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.5.17 தலைப்பு 726 – பிரதி பிரதான செயலாளர் (பொறியியல் சேவை) அலுவலகம்**

**(அ) சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதி பிரதான செயலாளர் (பொறியியல் சேவை) அலுவலகத்தினால் 2023 திசெம்பர் 31 திகதி 02 வருடங்களை விஞ்சிய வருமானத்திற்கு எடுக்க வேண்டிய ரூபா 6,236,856 ஆன நிறுத்தல் வைப்பு தொகை தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 பிரகாரம் நடவடிக்கை எடுக்காது வைப்பை விடுவித்தல் மற்றும் மீள் பெறுவனவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | தற்போது காலாவதியான வைப்புக்கள் தொடர்பாக புலனாய்வு செய்து மிக விரைவில் காலாவதியான வைப்புக்களை உயர்ந்தவாறு தீர்த்து வைக்க நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடுகிறேன். | நிதிப் பிரமாணம் 571 பிரகாரம் காலாவதியான வைப்புக்களை இனங்கண்டு பொறுத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## (ஆ) கருத்திட்டங்களை செயற்படுத்துதல்

### தாமதமான கருத்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 73,177,786 ஆன மஹியங்கன நன்னடத்தை கட்டிட நிர்மாண கருத்திட்டத்தின் வேலைகள் 2022 நவம்பர் 28 திகதி பூர்த்தி செய்ய இருந்த போதும் 2024 சனவரி 31 திகதி வரை வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு இருக்காததுடன் கருத்திட்டதின் பௌதீக செயலாற்றுகை 50 சதவீத மட்டத்தில் நிலவியது. அத் திகதி பூர்த்தி செய்திருந்த வேலைப் பகுதிகளிற்காக விலை வித்தியாசங்கள் உள்ளடங்களாக ரூபா 46,537,466 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் அதன் உடன்பட்ட ஒப்பந்த பெறுமதி ரூபா 54,902,042 இன் 85 சதவீதமானது.<br><br>அதன் பிரகாரம் நிதி முன்னேற்றத்திற்கு ஒப்பாக பௌதீக செயலாற்றளை அடைந்து கொண்டிருக்காததுடன் ஒப்பந்த உடன்படிக்கையில் உள்ளடங்கும் ரூபா 11,665,882 ஆன செயற்பாடுகள் முழுமையாக மேற்கொள்ளாது வேலையின் ஒப்பந்ததாரர் முழுமையாக விலகியிருந்தார். ஓப்பந்ததாரர் தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுத்திருக்காததுடன் வேலையின் உடன்படிக்கையை இரத்துச் செய்து மீண்டும் பெறுகைகள் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு இருந்தது. | நிர்மாணங்களை மேற்கொண்டு செல்லும் போது, இடம்பெற்ற அத்திவாரத்தின் மாற்றத்திற்காக அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளல், 2021 ஆண்டில் தீவிரமாக நிலவிய கொவிட் தொற்று நெருக்கடி, மற்றும் விஷேடமாக 2022 ஆண்டில் நாட்டில் ஏற்பட்ட நிலைமைகள் மீது ஏற்பட்ட நிர்மாண பொருட்கள் மற்றும் உதிரிப் பாகங்கள் உள்ளிட்ட ஏனைய அனைத்து பொருட்களின் விலை எல்லையின்றி உயர்ந்தமை மற்றும் அந்த அந்த ஆண்டுகளிற்காக ஒதுக்கப்பட்ட ஏற்பாட்டுத் தொகை மட்டுப்படுத்தப்பட்டமை 2022 நவம்பர் 28 திகதி நிர்மாணத்தை பூர்த்தி செய்ய இயலாதிருக்க தாக்கம் செலுத்தியுள்ளன.<br><br>நிர்மாண தாமதம் காரணமாக ஒப்பந்தத்தை இரத்துச் செய்து மீண்டும் பெறுகைகள் நடவடிக்கை மேற்கொள்வதில் இதற்காக வேறான செலவை மேற்கொள்ள காரணமாவதால் பல சந்தர்ப்பங்களில் ஒப்பந்த நிறுவனத்துடன் கலந்துரையாடி அந்த நிறுவனத்திடமிருந்தே நிர்மாணத்தை பூர்த்தி செய்து கொள்ள முயன்றதுடன், ஒப்பந்த நிறுவனம் இணங்கிய பிரகாரம் நடவடிக்கை எடுக்காத காரணத்தால் தற்போது அவ் வேலையின் உடன்படிக்கையை இரத்துச் செய்து மீண்டும் பெறுகைகள் நடவடிக்கை மேற்கொண்டு புதிய ஒப்பந்த நிறுவனமொனறை தெரிவு செய்ய பெறுகைகள் நடவடிக்கை மேற்கொண்டு விலைமனு மதிப்பிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிர்மாணத்தை உரிய காலத்தினுள் பூர்த்தி செய்யய நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் கவனயீனம் காரணமாக ஏற்படும் தாமதங்களின் நட்டத்தை பொறுப்புவாய்ந்த அலுவலர்களிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.18 தலைப்பு 731 – வீதி அபிவிருத்தி திணைக்களம்

**(அ) முகாமைத்துவ செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஊவா மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு சொந்தமான வாகனம் ஒன்றிற்கு ஏற்பட்டிருந்த விபத்து தொடர்பாக அறவிட வேண்டிய நட்டம் ரூபா 703,600 தொகையை மீளாய்வாண்டு இறுதி வரை பொறுப்புவாய்ந்த தரப்பினர் இடமிருந்து அறவிட்டிருக்கவில்லை. | இலக்கம் 54-1355 கொண்ட வாகனத்தின் விபத்து தொடர்பாக மாகாண பொறியியல் அலுவலகத்தினால் மொத்த மதிப்பீடொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அவ் அறிக்கை பிரகாரம் வாகன விபத்து காரணமாக ஏற்பட்ட திருத்தங்களிற்கு ரூபா 703,600 தொகை நட்டமாக அறவிட வேண்டியதுடன், அநத வாகனம் தற்போது திருத்தத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது. | நட்டத்தின் பெறுமதியை குறித்த தரப்பினரிடம் இருந்து அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.19 தலைப்பு 736 – பிரதி பிரதான செயலாளர் (நிதி முகாமைத்துவ) அலுவலகம்

**(அ) இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| 571 | 2023 திசெம்பர் 31 திகதியன்று 14 நிறுவனங்களிற்குரிய 02 ஆண்டுகளை விஞ்சிய தீர்க்கப்படாத ரூபா 1,805,909 ஆன பொது வைப்பு மீதியொன்றானது. | பெறுமதி ரூபா 1,805,909 ஆன பொது வைப்புக்களை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும். | காலாவதியான வைப்பு நிதிப் பிரமாணங்களிற்கு இணங்க தீர்க்கப்பட வேண்டும். |

**(ஆ) வருமான முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 திகதியன்று ஒட்டு மொத்த வருமானங்களின் மொத்த தேறிய நிலுவை ரூபா 155,866,800 ஆனதுடன் அந்த நிலுவைத் | காணி நிலுவை வரி தொடர்பாக குறித்த நிலுவைத் தொகையை செலுத்தாதன் காரணமாக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்க ஆணையாளர் நாயகத்திற்கு கடிதம் மூலம் அறிவுறுத்தப்பட்டது. | நிலுவை தொகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| தொகையை அறவிட போதிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மாகாண சபைக்கு சட்ட நடவடிக்கை மேற்கொள்ள அதிகாரம் இல்லாததால் காணி ஆணையாளர் நாயகத்தின் 2021/06 மற்றும் 2021 ஒக்டோபர் 13 திகதிய சுற்றறிக்கை பிரகாரம் நிலுவை குத்தகை செலுத்தாத குத்தகைதாரர்களின் குத்தகை பத்திரத்தை இரத்துச் செய்து சட்ட நடவடிக்கை எடுக்க காணி ஆணையாளரிற்கு அனுப்புமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க காணி ஆணையாளரின் சம இலக்கம் UPLC/D/4/பொது மற்றும் 2021 ஒக்டோபர் 18 திகதிய கடிதம் மூலம் அனைத்து பிரதேச செயலாளர்களும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிடுகிறேன்.<br><br>**ஆதன ஒப்படைப்பு மூலம் முத்திரை வரி**<br><br>ஓப்படைப் பத்திரத்திற்காக சரியான பெறுமதியின் மீது முத்திரை கட்டணத்தை அறவிட்டிருக்காத சந்தர்ப்பங்களில் குறை பெறுமதியுடன் எழுதியுள்ள உறுதிகளை பரீட்சித்து அந்த நபர்களிற்காக குறித்த நிலுவை தொகையை செலுத்த காலமொன்று வழங்கப்படும். அவ்வாறு செலுத்தும் செயற்பாடொன்று இடம் பெறுவதுடன் கொடுப்பனவு செய்யாத நபர்களிற்காக நீதிமன்ற நடவடிக்கை எடுத்து அந்த நிலுவை தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இந்த செயற்பாடு வருடாந்தம் தொடர்ச்சியாக இடம்பெறும் செயன்முறையென குறிப்பிடுகிறேன்.<br><br>**கள் மதுபானசாலை வரி/ நானாவித பெறுவனவு**<br><br>இது தொடர்பாக தொடர்சியான அறிவுறுத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவ்வாறே இந்த நபர்களை தற்போது கண்டறிய முடியாதுள்ளது. அதனால் சட்ட நவடிக்கை எடுத்தல் அல்லது |

அதனால் பயனில்லையெனில் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் குறித்த தொகையை பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**(இ) ஏனைய முற்பணக் கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஊவா மாகாண சபையின் அமைச்சு, திணைக்களம் மற்றும் அலுவலகங்களிற்கு வெளியில் இடமாறிச் சென்ற, அலுவலர்களிடம் இருந்து ரூபா 36,203,255 ஆன மீதி மற்றும் மரணித்த மற்றும் ஓய்வுபெற்ற, பணித் தடை செய்த மற்றும் சேவையை விட்டுச் சென்ற ஏனைய அலுவலர்களிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 22,378,751 கடன் மீதி தொடர்பாக தாபன விதிக் கோவை XXIV அத்தியாயத்தின் ஏற்பாடுகள் மற்றும் 2019 ஜுன் 27 திகதிய இலக்கம் 05/2019 கொண்ட அரச நிதி சுற்றறிக்கையின் 03(அ)(ஆ)(உ) ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இடமாறிச் சென்ற அலுவலர்களிடமிருந்து அறவிட வேண்டிய கடனினுள் அதிக தொகை காணப்படுவது ஏனைய மாகாண சபைகள் மற்றும் மத்திய அரசிற்கு சென்ற அலுவலர்களின் கடன் மீதியாகும். அம் மீதிகளை அறவிட மாகாண சபைகளிற்கு இடையில் மற்றும் மத்திய அரசை அறிவூட்டி கலந்துரையாடி உள்ளதுடன் அம் மீதிகள் படிப்படியாக தீர்க்கப்படுகின்றது. அவ்வாறே மாகாண சபை அலுவலர்கள் இடமாறிச் செல்லும் சந்தர்ப்பத்தில் மொத்த கடன் மீதியையும் ஒரே முறையில் அறவிட நடவடிக்கை எடுக்க அனைத் நிறுவனங்களைளும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஓய்வு பெற்ற அலுவலர்களிடமிருந்து அறவிட வேண்டிய கடன் மீதிகளை ஓய்வூதிய திணைக்களத்தின் ஊடாக தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள போதும் அத் திணைக்களத்தில் காணப்படும் திரவத்தன்மை பிரச்சினை காரணமாக கடன் தீர்ப்பனவு தாமதித்துள்ளது. மரணித்த மற்றும் கடமையை விட்டுச் சென்ற அலுவலர்களின் கடன் மீதியை தீர்த்துக் கொள்வதற்கு உரிய அறிவுரை குறித்த நிறுவனங்களிற்கு வழங்கப்பட்டுள்ளது. | தாபன விதிக் கோவை XXIV அத்தியாயத்தின் ஏற்பாடுகள் மற்றும் 2019 ஜுன் 27 திகதிய இலக்கம் 05/2019 கொண்ட அரச நிதி சுற்றறிக்கையின் 03(அ)(ஆ)(உ) ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**(ஈ) தீர்க்கப்பட வேண்டிய கடன் மீதிகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | ஊவா மாகாண சபையின் அமைச்சு, திணைக்களம் மற்றும் 07 அலுவலகங்களில் இருந்து இடமாறி வந்த | ஏனைய மாகாண சபைகள் மத்திய அரசு மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களில் இருந்து வந்த அலுவலர்களின் கடன் மீதிகள் இதனுள் | கடன் மீதிகளை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அலுவலர்களிடம் இருந்து ரூபா 31,104,029 ஆன கடன் மீதியை தீர்த்திருக்கவில்லை. | உள்ளடங்கும். இந்த மீதிகளை தற்போது படிப்படியாக தீர்க்கப்படுகின்றது. | |
| (ii) | மாகாண அரச உத்தியோகத்தரி முற்பணக்கணக்கில் 2023 திசெம்பர் 31 திகதியன்று 10 நிறுவனங்களிற்குரிய ரூபா 13,221,469 இனங்காணப்படாத கடன்கொடுனர் மீதிகள் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டு இறுதியில் அதனை தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கவல்லை. மேற்குறித்த மீதியில் உள்ளடங்கும் ரூபா 13,112,693 தொகை ஊவா மாகாண கல்வித் திணைக்களத்தினால் தீர்க்காது நீண்ட காலமாக நிலவிவரும் கடன் மீதியாவதுடன் அதற்குரிய அலுவலர்கள் தொடர்பாக விபரங்கள் மற்றும் காலப் பகுப்பாய்வு போன்ற விரிவான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததால் அம் மீதி தொடர்பாக திருப்திகரமாக பரீட்சிக்க முடியவில்லை. | மாகாண சபை நிறுவப்பட்ட ஆரம்ப காலத்தில் மத்திய அரசின் ஆசிரியர்களை மாகாண சபைக்கு உள்ளீர்ப்பு செய்யும் போது ஆரம் சில ஆண்டுகளில் அந்த அலுவலர்களின் கடன் மீதி மாகாண சபைக்கு அறவிடப்பட்டுள்ளது. அந்த கடன் மீதிகளை மாகாண சபையினால் வரிசை அமைச்சிற்கு தீர்ப்பனவு செய்திருக்காததுடன் அந்த கடன் மீதிகள் பொது திறைசேரிக்கு சுவீகரிப்பு செய்யப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், கணக்கு மூடப்பட்ட காரணத்தால் ஆரம்பத்தில் இந்த கடன் மீதிகள் பொது திறைசேரிக்கு தீர்க்கப்பட்டுள்ளன. உள்ளீர்பிற்கு உரியதாக பொது திறைசேரிக்கு கணக்கு வைத்தல் பூர்த்தியாகி உள்ளதால் இந்த கடன் மீதிகள் மாகாண கல்வி திணைக்களத்தின் மாகாண சபைகளிற்கு இடையில் தீர்க்க வேண்டிய கடன் மீதிகளை தீர்த்துக் கொண்டதன் பின்னர் மாகாண சபையின் வருமானமாக கணக்கு வைக்க குறித்துக் கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும். | கடன் மீதிகளை இனங்கண்டு தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) | ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களில் மாகாண அரச உத்தியோகத்தர்களின் கடன் குறிப்பு இலக்கம் 10 இல் 04 நிறுவனங்களிற்கு ''ஏனைய'' எனும் தலைப்பின் கீழ் முன்வைத்திருந்த ரூபா 2,369,847 ஆன அறவிட வேண்டிய கடன் மீதிகளை திட்டவட்டமாக இனங்காண முடியுமானவாறு வெவ்வேறாக கடன் வகையின் பிரகாரம் பகிரந்து அந்த நிறுவனங்களிற்கு ஒதுக்கீட்டுக் கணக்கின் 3.8 இணைப்பில் மற்றும் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களில் | கல்வி அமைச்சின் மற்றும் சுகாதார சேவைகள் திணைக்களத்தில் உள்நாட்டு விடுமுறை பெற்றிருந்த அலுவலர்களிடமிருந்து அறவிட வேண்டிய கடன் மீதிகள் தொடர்பாக விபரங்கள் பீ முற்பணக் கணக்கில் 3.8 இணைப்பில் காண்பித்துள்ளதுடன் அந்த கடன் மீதிகள் அறவிடப்படுகின்றன. கல்வி அமைச்சு மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களிறகு உரியதாக காணப்படும் ரூபா 1,981,060 தொகை மற்றும் ரூபா 117,757 ஆன கடன் மீதிகள் இனங்காணப்பட்டு வருகின்றன. | கடன் மீதிகளை இனங்கண்டு தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

காண்பித்திருக்காத காரணத்தால் அக் கடன் மீதிகளை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிக்க முடியவில்லை.

### 1.5.20 தலைப்பு 738 – பிரதி பிரதான செயலாளர் (நிர்வாகம்) அலுவலகம்

**(அ) இணக்கயின்மைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைகள்**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் தொடர்பு | இணக்காமை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | பொது நிர்வாக சுற்றறிக்கை | | | |
| (i) | இலக்கம் 26/92 மற்றும் 1992 ஆகஸ்ட் 19 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை மற்றும் 01/2002 மற்றும் 2002 பெப்ரவரி 25 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை | அரச வாகனங்களை தனிப்பட்ட பாவணைக்காக பயன்படுத்த உரித்துள்ள அரச மற்றும் அரச / கூட்டுத்தாபன அலுவலர்களிற்காக ஒதுக்கியுள்ள வாகனங்கள் தொடர்பாக அல்லாது ஏனைய அனைத்து வாகனங்களிற்கும் அரச இலட்சனை இடப்பட வேண்டியதுடன் ஊவா மாகாண சபையின் 23 நிறுவனங்களிற்கு உரிய 98 வாகனங்களிற்கு அரச இலட்சினை இடுவதற்கு மேலதிகமாக நிறுவனத்தின் பெயர் வாகனத்தின் உடலில் குறித்திருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | இலக்கம் 30/2016 மற்றும் 2016 திசெம்பர் 29 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை | ஊவா மாகாண சபையின் 21 நிறுவனங்களிற்கு உரிய 135 வாகனங்கள் தொடர்பாக சுற்றறிக்கை அறிவுறுத்தல் எரிபொருள் பாவனை பரிசோதனை உரியவாறு மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**(ஆ) முகாமைத்துவ செயற்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | பாவனைக்குதகாத வாகனம், பராதீனத்தின் போது இரண்டு வாகனங்களிற்கு தனியார் கொள்வனவாளர்களினால் 2019 சனவரி 04 திகதி கொள்வனவு செய்திருந்த போதும், மோடார் வாகன போக்குவரத்து திணைக்கள கணனி தகவல் தொகுதியிலிருந்து பெற்ற தகவல்களின் பிரகாரம் 2023 செம்படம்பர் 13 திகதி வரை ஊவா மாகாண பிரதான செயலாளர் மற்றும் ஊவா மாகாண விவசாய பணிப்பாளர் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்தன. | ஓட்டத்திற்கு பொறுத்தமற்ற நிலையில் காணப்பட்டதால் வாகனமொன்றாக பராதீனம் செய்யப்பட்டுள்ளதுடன் தனியார் தரப்பினரிற்கு ஆரம்ப பதிவு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. டென்டர் ஊடாக பெற்றுக் கொள்ளும் வாகனங்களை திருத்தி ஓட்டத்தில் ஈடுபடுத்த தேவையான தகைமை சான்றிதழ், புகை சான்றிதழ் மற்றும் வருமான அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொண்ட பின்னர் ஓட்டத்தில் ஈடுபடுத்த காலமொன்று செல்வதாக அநேகமாக அவதானிக்கும் விடயமொன்றாகும். வாகன பதிவு மாறும் வரை வாகனத்தின் நிகழ்கால உரிமை மாற்றமின்றி காணப்படும். இந்த வானத்தின் பதிவு மாறிய பின்னர் டென்டர் மூலம் ஒப்படைத்த திகதியில் இருந்து குறித்த முழுக் காலம் வரை நிலுவை வருமானத்தை பெற்றுக் கொண்டு வருமான அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை இடம்பெறும். | வானத்தை பராதீனம் செய்த பின்னர் உரிமையை வழங்குவது தொடர்பாக பின்னூட்டல் செய்ய வேண்டும். |
| (ii) | 2019 சனவரி 04 திகதி பழுதடைந்த பொருட்களாக விற்பனை செய்யப்பட்ட ஊவா மாகாண சபைக்கு சொந்தமான பாவனைக்கு உதவாததாக காணப்பட்ட 18 வாகனங்கள் மோடார் வாகன போக்குவரத்து திணைக்கள கணனி தகவல் தொகுதியிலிருந்த பெற்ற தகவல்களின் பிரகாரம் 2023 செம்படம்பர் 13 திகதி வரை அரசின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்தன. | இது தொடர்பாக உரிய காலங்களில் மோடார் வாகன போக்குவரத்து திணைக்களத்திற்கு அறிவுறுத்தல் செய்யப்பட்டுள்ளது. அவ்வாறே தற்போது அரச கணக்குகள் செயற்குழுவினால் வழங்கிய கட்டளை பிரகாரம் விடுக்கப்பட்ட கோரிக்கை பிரகாரம் கடந்த 10 ஆண்டுகளினுள் அரசினால் ஏலவிற்பனை செய்த மற்றும் பழுதடைந்த பொருட்கள் தொடர்பான விபரமொன்றும் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், மோடார் வாகன திணைக்களத்தின் தகவல் தொகுதி நாளாதுவரையாக குறித்த தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன. | வாகன பராதீனத்தின் பின்னர் நிறுவனங்களிற்கு இடையே ஒருங்கிணைப்பின் ஊடாக வாகன தகவல் தொகுதியை நாளாதுவரையாக்கிக் கொள்ள வேண்டும் |

**(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்**

**பராமரிப்பு மற்றும் திருத்தப்படாமை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | திருத்த வேலைகளிற்காக மாகாண இயந்திரவியல் பணிப்பாளரிற்கு ஒப்படைத்து இருந்த ஊவா மாகாண சபையின் 03 நிறுவனங்களிற்குரிய 04 வாகனங்கள் கணக்காய்வு திகதிய 2023 ஆகஸ்ட் 09 திகதியன்றும் குறித்த பணிகள் மேற்கொள்ளப்படாது இயந்திரவியல் பொறியியலாளர் பணிப்பாளர் அலுவலகத்தின் வெளி வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் 03 நிறுவனங்களிற்குரிய 04 வாகனங்கள் திருத்த வேலைகளிற்காக மாகாண சபை பராமரிப்பு அலகிற்கு ஒப்படைத்து 04 மாதங்கள் முதல் 44 மாதங்கள் வரையான காலம் கடந்திருந்த போதும் குறித்த திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | **PA-8631 கொண்ட வாகனம்**<br>உதிரிப் பாகங்கள் கிடைக்காததால் குறித்த உதிரிப் பாகங்களை வழங்கிய பின்னர் திருத்த வேலைகளை பூர்த்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளன.<br><br>**LW-0222 கொண்ட வாகனம்**<br>இந்த வாகனம் அந்த நிறுவனத்தால் எரிபொருள் தெறி உந்தியின் திருத்தத்திற்காக வெளி தனியார் நிறுவனமொன்றிற்கு வழங்கி பல ஆண்டுகள் கடந்துள்ள போதும், திருத்த வேலைகளை பூர்த்தி செய்ய இயலாதிருக்கையில் அந்த நிறுவனத்தின் கோரிக்கை பிரகாரம் இந்த நிறுவன வளவிற்கு கொண்டுவரப்பட்ட போதும் திருத்த வேலைக்காக குறித்த தனியார் நிறுவனத்தினால் கலற்றிய 04 தெறிப்பான்களையும் இதுவரை ஒழுங்காக ஒப்படைக்காததால், அவை கிடைத்த உடனே திருத்த வேலைகளை பூர்த்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளன.<br><br>**18-5365 கொண்ட வாகனம்**<br>உதிரிப் பாகங்களை தேடிக் கொள்வதன் கடினம் காரணமாக திருத்த வேலைகள் தாமதித்தன.<br><br>**31-1135 கொண்ட வாகனம்**<br>இந்த வாகனத்தை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தினால் ஒப்படைக்கவில்லை.<br><br>**56-7780, 40-8504, 252-4236, LW-0252 கொண்ட வாகனங்கள்**<br>திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | வாகனங்களை உரியகாலத்தில் திருத்தி பயன்படுத்த செயன்முறையொன்றை தயாரிக்க வேண்டும். |

**(ஈ) வாகன பயன்பாடு**

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | ஊவா மாகாண சபைக்குரிய 04 நிறுவனங்களின் பெயரில் மோடார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்துள்ள 12 வாகனங்கள் மற்றும் 04 மோடார் சைக்கில்களின் பௌதீக இருப்பை உறுதி செய்து கொள்ள முடியவில்லை. | **80-9282, 36-0136, 71-4458, 42-0319, 42-2182, 42-4236 மற்றும் GB 4823 கொண்ட வாகனங்கள்**<br><br>வருமான அனுமதிப் பத்திரம் பெறப்படாததால் இந்த வாகனம் பயன்படுத்தப்படவில்லையெனவும் உற்பத்தி ஆண்டின் பிரகாரம் இதற்கு 10 ஆண்டுகளிற்கு முந்திய காலத்தினுள் இந்த வாகனங்களை பராதீனத்திற்காக அனுப்பப்பட்டிருக்க முடியுமாவதுடன் மோடார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் தகவல்கள் நாளாதுவரையாகாது இருக்க இயலும்.<br><br>**53-5063 கொண்ட வாகனம்**<br>53-5060 முதல் 53-5080 வரை அனைத்து வாகனங்களும் இருந்துள்ளது உள்ளூராட்சி நிறுவனங்களிற்கு 1993 ஆண்டில் சபைகளிற்கு வழங்கப்பட்டுள்ளன. இந்த வாகனங்கள் தவிர ஏனைய அனைத்து வாகனங்களும் 2012 ஆண்டு முதல் பல சந்தர்ப்பங்களில் பராதீனம் செய்யப்பட்டுள்ளன. கடந்த காலங்களினுள் யுத்த நடவடிக்கைகளிற்கு இலங்கை தரைப்படையினால் மாகாண சபைகளில் காணப்பட்ட இந்த வாகனங்களை பயன்படுத்தியுள்ளதுடன் அந்த வாகனங்களை மீண்டும் ஒப்படைக்கும் போது பழுதடைந்த நிலையில் காணப்பட்டதால் அந்த வாகனங்களை விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. இந்த வாகனங்களின் பதிவு சான்றிதழ் அலுவலகத்தில் இருந்த போதும் வாகனங்களை மீள் ஒப்படைத்திருக்கவில்லை. அதனால் அக்காலத்தினுள் வாகனம் அழிவடைத்திருக்க முடியுமென அவதானிக்கப்படுகின்றது. | குறித்த வாகனங்கள் மற்றும் மோடார் சைக்கில்களின் பௌதீக இருப்பை அல்லது பராதீன தகவல்களை உறுதி செய்வதற்கு உரியதான சான்றுகளை கணக்காய்விற்கு அறிக்கையிட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | **GG-3905, XZ-9423 மற்றும் XZ-9439 கொண்ட வாகனங்கள்** நிலையான சொத்துக்கள் தொடர்பான தரவுகளை கணனி தொகுதிக்கு உட்படுத்துவதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | |
| | **HK, 5808, RW 0501 மற்றும் SP 1349 கொண்ட வாகனங்கள்** ஒப்படைப்பை மாற்றுவதற்கு அறிவுறுத்த குறிப்பு இடப்பட்டுள்ளது. | |
| | **17-1012, 16-7667** 10 ஆண்டுகளிற்கு முந்திய காலத்தினுள் இந்த வாகனங்களை பராதீனத்திற்கு உட்பட்டுள்ளதுடன் மோடார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் தகவல்கள் நாளாதுவரையாகாது இருக்க இயலும். | |

**1.5.21 தலைப்பு 739 உள்ளக கணக்காய்வு திணைக்களம்**

**(அ) முகாமைத்துவ செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 11 திகதிய இலக்கம் UV/FCR/2017/II/VOI II கொண்ட முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் ஆளணியினர் மீளாய்வு கடிதத்தின் பிரகாரம் திணைக்களத்திலான பதவி ஒன்றாக (MN4) 18 உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் பதவிகள் அங்கீகரிக்கப்பட்டு 2023 ஒக்டோபர் அளவில் 05 ஆண்டுகளிற்கு அன்மித்த காலம் கடந்துள்ள போதும், மாகாண உள்ளக கணக்காய்வு திணைக்களம் அந்த 18 பதவிகளிற்கான ஆட்சேர்ப்பு திட்டம் மற்றும் சேவை திட்டத்தை | கணக்காய்வு உத்தியோகத்தர்களிற்காக ஆட்சேர்ப்பு திட்டமொன்று தற்போது வரைவு செய்யப்பட்டுள்ளது. 2013 சனவரி 01 திகதிக்கு அங்கீகார ஆளணியினர் அறிக்கை பிரகாரம் அங்கீரிக்கப்பட்டுள்ள 18 கணக்காய்வு உத்தியோகத்தர் பதவிக்காக ஊவா மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் 2020 செப்டம்பர் 18 திகதி 18 உத்தியோகத்தர்களை நியமித்துள்ளது. | உள்ளக கணக்காய்வு சேவைக்கான ஆட்சேர்ப்பு திட்டம் மற்றும் சேவைத் திட்டமொன்றை தயாரித்துக் கொள்ள வேண்டும். |

தயாரித்திருக்கவில்லை.
2020 ஆண்டில் 05 வருட காலத்திற்காக 17 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் 02 முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களாக 19 உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

## 2. நிதி மீளாய்வு

### (அ) நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மாகாண சபை நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 2,943,894,498 பற்றாக்குறையானதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 3,328,737,256 ஆனது. அதன் பிரகாரம் கடந்த ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் நிதி விளைவுகளின வளர்ச்சி ரூபா 384,842,758 ஆனது.

### (ஆ) வருமானம் மற்றும் செலவின விலகல்கள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் மீளாய்வாண்டின் முன்னைய ஆண்டின் வருமானம் மற்றும் செலவினம் தொடர்பான பொழிப்பு பின்வருமாறு.

**வருமானம்**

| | **2023 உள்ளவாறு ரூபா** | **2022 உள்ளவாறு ரூபா** | **விலகல்கள்** |
|---|---|---|---|
| **மாகாண சபை விடயங்களிற்குரிய வருமானம்** | | | |
| வரி வருமானம் | 1,880,523,416 | 1,583,187,067 | 297,336,349 |
| வரியல்லாத வருமானம் | 737,383,636 | 670,373,795 | 67,009,841 |
| அரசாங்க மானியம் | 33,203,977,046 | 28,518,761,554 | 4,685,215,492 |
| கூட்டுத் தொகை | 35,821,884,098 | 30,772,322,416 | 5,049,561,682 |

**செலவினம்**

| | **2023 உள்ளவாறு ரூபா** | **2022 உள்ளவாறு ரூபா** | **விலகல்கள்** |
|---|---|---|---|
| **மீண்டுவரும் செலவினம்** | | | |
| தனிப்பட்ட சம்பளம் | 26,346,038,860 | 23,781,726,765 | 2,564,312,095 |

| | | | |
|---|---|---|---|
| ஏனைய மீண்டுவருபவை | 11,380,202,817 | 9,601,454,352 | 1,778,748,465 |
| உப கூட்டுத் தொகை | 37,726,241,677 | 33,383,181,117 | 4,343,060,560 |
| | ========== | ========== | ========= |
| மீண்டுவரும் தன்மையிலான அபிவிருத்தி செலவு | 1,039,536,919 | 717,878,555 | 321,658,364 |
| | ------------------------ | ----------------------- | ---------------------- |
| கூட்டுத் தொகை | 38,765,778,596 | 34,101,059,672 | 4,664,718,924 |
| மிகை /(பற்றாக்குறை) | **(2,943,894,498)** | **(3,328,737,256)** | **(384,842,758)** |

| | | |
|---|---|---|
| - | மீண்டுவரும் தன்மையிலான அபிவிருத்தி செலவினம் | 1,039,536,919 |
| - | நிலையான சொத்தாக கணக்கீடு செய்யப்படும் மூலதனமாக்கபடும் செலவினம் | 1,646,270,527 |
| | | ---------------------- |
| | அரசாங்க முதலீடுகள் | 2,685,807,446 |
| | | =========== |

மீளாய்வாண்டின் மொத்த வருமானம் ரூபா 35,821,884,098 ஆனதுடன் அவற்றில் ரூபா 33,203,977,046 அரசாங்க மானியமாகும். வரி வருமானம் ரூபா 1,880,523,416 தொகை அதாவது மொத்த வருமானத்தின் 5 சதவீதமும் வரியல்லாத வருமானம் ரூபா 737,383,636 தொகை அதாவது மொத்த வருமானத்தின் 2 சதவீதமும் ஆகவிருந்தது. ஆண்டின் மொத்த வருமானமான ரூபா 35,821,884,098 இல் மீண்டுவரும் செலவினத்திற்காக (பெறுமானத் தேய்வு தவிர) ரூபா 32,941,875,483 அதாவது 92 சதவீதமும் அரசாங்க முதலீடுகளிற்காக ரூபா 2,685,807,446 அதாவது 08 சதவீதமும் பயன்படுத்தப்பட்டிருந்தன.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

### (அ) அரசாங்க மானியம்

மாகாண சபை அபிவிருத்தி வேலை உத்தேசத்திற்காக கிடைத்திருந்த ஏற்பாடு மற்றும் அவற்றை பயன்படுத்துவது தொடர்பான விபரம் பின்வருமாறு

| **மூலாதாரம்** | **அங்கீகாரத் தொகை** | **செலவிட்ட தொகை** | **குறை பயன்பாடு** |
|---|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| திட்டவட்டமான மானியம | 369,000,000 | 202,110,494 | 166,889,506 |
| மாகாண விடய திட்டவட்ட அபிவிருத்தி மானியம் உலக வங்கி உதவி | 2,093,000,000 | 857,712,481 | 1,235,287,519 |
| விஷேட பிரிவு அபிவிருத்தி கருத்திட்ட மானியம் (கல்வி) | 447,247,354 | 380,737,783 | 66,509,571 |
| விஷேட பிரிவு அபிவிருத்தி கருத்திட்ட மானியம் (சுகாதாரம்) | 1,445,000,000 | 1,423,332,165 | 21,667,835 |
| ஏனைய - UNDP | 81,909,323 | 76,939,068 | 4,970,255 |
| UNICEF | 48,000,000 | 48,000,000 | - |
| | ----------------------- | ---------------------- | --------------------- |
| கூட்டுத் தொகை | **4,484,156,677** | **2,988,831,991** | **1,495,324,686** |
| | ========== | ========== | ========== |

**(ஆ) மாகாண அபிவிருத்தித் திட்டம்**

மீளாய்வாண்டிற்காக மாகாண அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் புதிய வேலை மற்றும் நடைமுறை வேலைகளிற்காக ரூபா 4484 மில்லியன் மதிப்பீட்டு பெறுமதிக்கான 1483 கருத்திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. மாகாண சபையின் முன்னேற்ற அறிக்கை பிரகாரம் கருத்திட்ட வேலை உத்தேசங்களின் முன்னேற்றம் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றது.

| **கருத்திட்டங்களின் செயலாற்றுகை மட்டம்** | **புதிய வேலை உத்தேச எண்ணிக்கை** | **நடைமுறை வேலை உத்தேச எண்ணிக்கை** | **மொத்த வேலை உத்தேச எண்ணிக்கை** | **மோத்த வேலைகளின் மதிப்பீட்டு பெறுமதி** |
|---|---|---|---|---|
| | | | | **ரூபா** |
| முழுமையாக பூர்த்தி செய்த | 727 | 190 | 917 | 4,484,156,677 |
| 50% இற்கு அதிகம் பூர்த்தி செய்த | 26 | 18 | 44 | |
| 50% இற்கு குறைபாக பூர்த்தி செய்த | 22 | 4 | 26 | |
| ஆரம்பிக்கப்படாத | 496 | - | 496 | |
| கூட்டுத் தொகை | 1271 | 212 | 1483 | |